உ
சிவமயம்





நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்து
தற்போது கொக்குவில் கிழக்கில் வசித்தவருமான

# அமரர் விசுவலிங்கம் நாகம்மா

அவர்களது சிவபதப்பேறு குறித்த

# நாக தீபம்

## 06.12.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்
கொண்டிருந்து தற்போது கொக்குவில் கிழக்கில்
வசித்தவருமான

# அமரர்
# விசுவலிங்கம் நாகம்மா

அவர்களது சிவபதப்பேறு குறித்த

# "நாக தீபம்"

## 06.12.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இறைநெறி தவறாது வாழ்ந்து அன்னைக்கு
வரைவிலக்கணம் காட்டி, மார்பு தட்டி வைத்தெமக்கு
பணி புரிந்து அந்தம் எய்திய எம் இதயத் திருவிளக்கு,
எல்லோர்க்கும் நல்லவளாய், அறிவுரைகள் பல கூறி
விருந்தோம்பலிற் சிறந்து விளங்கி
தன் மண்ணக வாழ்வைச் செவ்வனே
நிறைத்து விண்ணகம் சென்ற
எங்கள் அம்மா!
உங்கள் பாதக் கமலங்களில்
இந் நூலைச் சமர்ப்பிப்பதோடு ஏற்றருள வேண்டி
இருகரம் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ! ஓம் சாந்தி! !!

*இங்ஙனம்*
*குடும்பத்தினர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
**08.07.1927**

உதிர்வு
**06.11.2016**

# அமரர்
# நாகம்மா விசுவலிங்கம்
## (ஆசைப்பிள்ளை)

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த


## திதி நிருணய வெண்பா

**ஆண்டு துர்முகி ஐப்பசி ஏழ் மூன்று**
**தாண்டும் பூர்வத்துச் சப்தமியே - நீண்டபுகழ்**
**ஆசைப் பிள்ளையெனும் அன்புமிகு நாகம்மா**
**ஈசனடி ஏகிவிட்ட நாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## விநாயகர் துதி

*திருச்சிற்றம்பலம்*

**திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலாற் கூப்புவர் தம் கை.**

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பன்னிரு திருமுறை

திருச்சிற்றம்பலம்

**முதலாம் திருமுறை** **திருஞானசம்பந்தர் அருளியது**

பண்- மேகராகக்குறிஞ்சி

புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம் மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள் செய்வா னமருங்கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்குந் திருவையாறே

**இரண்டாம் திருமுறை** **திருஞானசம்பந்தர் அருளியது**

பண் - பியந்தைக் காந்தாரம்

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்க ளான பலவும்
அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாம் திருமுறை** **திருஞானசம்பந்தர் அருளியது**

பண் - காந்தார பஞ்சமம்

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் னடியலா லேத்தாதென்நா
ஐந்தலை யரவு கொண்டரைக் கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே

**நான்காம் திருமுறை** **திருநாவுக்கரசர் அருளியது**

பண் - கொல்லி

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடி யேனதி கைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

**ஐந்தாம் திருமுறை** **திருநாவுக்கரசர் அருளியது**

திருக்குறுந்தொகை

சந்தி ரன்னொடு சூரியர் தாமுடன்
வந்து சீர்வழி பாடுகள் செய்தபின்
ஐந்த லையர வின்பணி கொண்டருள்
மைந்தர் போல் மணி நாகேச் சரவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆறாந் திருமுறை** **திருநாவுக்கரசர் அருளியது**

திருத்தாண்டகம்

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேல் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங்கூராய்
செம்பொனே கம்பனே திகைத்திட் டேனே.

**ஏழாந்திருமுறை** **சுந்தரமூர்த்திநாயனார் அருளியது**

பண் - தக்கேசி

இலங்கை வேந்தன் எழில் திகழ் கயிலை
யெடுப்ப ஆங்கிம வான்மக ளஞ்சத்
துலங்கும் நீண்முடி யொருபதுந் தோள்க
ளிருப துந்நெரித் தின்னிசை கேட்டு
வலங்கை வாளொடு நாமமுங் கொடுத்த
வள்ள லைப்பிள்ளை மாமதிச் சடை மேல்
நலங்கொள் சோதி நள் ளாறனை அமுதை
நாயி னேன் மறந் தென்னினைக் கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எட்டாந்திருமுறை** **மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது**

சிந்தனை நின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணினைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தமிய னேற்கே

**ஒன்பதாந் திருமுறை** **திருமாளிகைத்தேவர் அருளியது**

திருவிசைப்பா பண் - பஞ்சமம்

நீறணி பவளக்குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செ யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒன்பதாந் திருமுறை** **சேந்தனார் அருளியது**

திருப்பல்லாண்டு பண் - பஞ்சமம்

நிட்டையி லாவுடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த் திக்கென் அகம் நெக ஊறும்
அமிர்தினுக்கு ஆலநீழல்
பட்டனுக்கு என்னைத் தன்பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பத்தாந்திருமுறை** **திருமூலர் அருளியது**

திருமந்திரம்

முன்னவ னார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னவர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினியில்
என்னரு நந்தி எடுத்துரைத் தானே.

**பதினொராந்திருமுறை** **ஐயடிகள் காடவர் கோன் அருளியது**

தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது
பெட்டப் பிணமொன்று பேரிட்டுக் -கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பன்னிரண்டாந் திருமுறை** **சேக்கிழார் அருளியது**

பெரியபுராணம்

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல் விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர் முன் வருகென உரைப்பார்.

**திருப்புகழ்** **அருணகிரிநாதர் அருளியது**

இருவினைக ளீட்டு மிழவுபடு கூட்டை
யெடுமெடென வீட்டி லனைவோரும்
இறுதியிடு காட்டி லழுதுதலை மாட்டி
லெரிய எரி மூட்டி யிடுமாறு
கரிய இரு கோட்டு முரணெருமை மோட்டர்
கயிறிறுக மாட்டி யழையா முன்
கனகமணி வாட்டு மருவுகழல் பூட்டு
கழலிணைகள் காட்டி யருள்வாயே
பருவ மலை நாட்டு மருவுகிளி யோட்டு
பழையகுற வாட்டி மணவாளா
பகைஞர் படை வீட்டில் முதியகன லூட்டு
பகருநுதல் நாட்ட குமரேசா
அருமறைகள் கூட்டி யுரை செய் தமிழ்ப் பாட்டை
அடைவடைவு கேட்ட முருகோனே
அலைகடலி லீட்ட அவுணர்தமை யோட்டி
அமரர் சிறை மீட்ட பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் இரண்டு நாள் அல்ல நான் உலகத்து
உதித்த இந்நாள் வரைக்கும்
ஒழியாத கவலையால் தீராத இன்னல் கொண்டு
உள்ளந் தளர்ந்து மிகவும்
அருநாண் இயற்றிட்ட விற் போல் இருக்கும் இவ்
வடிமைபாற் கருணை கூர்ந்து
அஞ்சேல் எனச் சொல்லி ஆதரிப்பவர்கள் உனை
அன்றிலை உண்மையாக
இரு நாழிகைப் போதும் வேண்டாது நிமிடத்தில்'
இவ்வகில புவனத்தையும்
இயற்றி யருளுந் திறங் கொண்ட நீ ஏழையேன்
இன்னல் தீர்த்து அருளல் அரிதோ
வருநாவலூரர் முதலோர் பரவும் இனிய புகழ்
வளர் திருக்கடவூரில் வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமி மகிழ்
வாமி! அபிராமி உமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபிராமி அந்தாதி    அபிராமிப்பட்டர் அருளியது**

அரணம் பொருள் என்று அருள் ஒன்றிலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே

## பட்டினத்தார் பாடல்கள்

### அன்னைக்கு இறுதிக்கடன் இயற்றும் பொழுது பாடியவை

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்தெடுத்துச் - செய்ய விரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து
அந்தி பகலாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்.

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல்-உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலை மேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையில்
அன்னை இட்ட தீ அடி வயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே

வேகுதே அதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளே சோணகி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய்

வீற்றிருந்தாள் அன்னை வீதி தனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந் நீறானாள் - பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமானவர் பாடல்

இனியேது மக்குனருள் வருமோ எனக் கருதி
ஏங்குதே நெஞ்சம் ஐயோ!
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்று
எண்ணவோ திடமில்லையே
அநியாய மாயிந்த உடலை நான் என்று வரும்
அந்தகற் காளாகவோ!
ஆடித்திரிந்து நான் கற்றதுங் கேட்டதும்
அவலமாய்ப் போதல் நன்றோ!
கனியேனும் வறிய செங்காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல் வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்து நான்
கண்மூடி மௌனியாகித்
தனியே இருப்பதற்கு எண்ணினேன் எண்ணமிது
சாமிநீ அறியாததோ
சர்வபரி பூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகேஸ்வரியம்மை பதிகம்** **அராலி முத்துக்குமாரப்புலவர்**

ஆகமது கூனித் தளர்ந்துரோ மம்வெளுத்
தைம்புல னொடுங்கி மேலாம்
அறிவழிந் தைமே லெழுந்ததீ தத்தினுயி
ரணுகுமக் காலை தனிலே
வேகவெங் கடமை பிடர் நெளிய வருய மனெற்கு
விடுகயிறு முடுகி யடுமுன்
வினையேனை யஞ்சலென் றுனதுநா யகருடன்
வெள்ளை விடைமீ தேறியே
பாகமுற வந்து நின் றடிமை கொண் டெனையும் நீ
பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலை செறி நயினை நகர்
பண்பு கொண்டுறை செல்வியே
நாகமடர் தாருவென மேவி முனி வோர் களுறை
நாடி வரு கோப விடமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே

**நாகபூஷணி அந்தாதி** **நயினை முத்துக்குமார சுவாமிகள்**

ஓங்கார சக்தி உமையே நினதடியே னுளத்தின்
தாங்கா வருத்தம் தருமிடராதியைச் சங்கரித்து
நீங்காத் தியானம் நிறைஞானம் ஆனந்த நேயநிலை
பங்காய் அருள்சிவையே பரையே பரமானந்தியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த வல்லி அகிலாண்ட நாயகி அம்பிகையே
மோனந்தரு முத்திவித்தே மயக்க முனைப்பறுத்து
ஈனந்தரு வினை எய்யாதொழித்து யமனணுகா
ஞானந்தா உமையே நயினாநகர் நாகம்மையே.

நாகம்மையே நளினாசனர் நாரணனாற் கரியர்
பாகம்மையே பரமானந்த வல்லி பதாம்புயத்தை
தாஇம்மையே தமியேன் இடர்தீர் தரராசசிவ
யோகம்மையே உதவே உமையே உயருத்தமியே.

**நயினை மான்மியம்** **வரகவி நயினை நாகமணிப் புலவர்**

நீருறவளைந்து புரண்டெழுந் திரைந்து
நிறைந்திடும் பணத்திரை விரித்துக்
காருறவிடங்கொண் டுலகெலா மீன்ற
கருணைநாயகி திருக் கோலத்
தேருற விளங்கு முரகமொத்திருந்த
விருங்கடனடுவ ணெண்டிசையும்
பாருடன்புகழத் திகழ்சிகா மணிபோற்
படிந்ததந் நயினையம் பதியே.

முச்சகமுந் தனியளிக்கு மருண்மழை தோய்ந்தன
குழலுமுது நீர்க் கஞ்சத்
தச்சனைய திருமுகமுங் கருவிழியும் வெண்ணகையு
மாம்பல் வாயுங்
கச்சணியு மிளமுலையு மலர்க்கரமுஞ் சிற்றிடையுங்
கனகத் தாளும்
பச்சுருவுந் திகழமணி யரங்கில் வளர் சுந்தரியைப்
பணிதல் செய்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பல திசையி னிருந்துளா ரெவரும்
படுவெயின் மழைவளி பாராச்
சொற்பெறு வழிக டந்துமார் கலிவாய்ச்
சுழிதிரை திமிலிடைக் கடந்துந்
நற்பகலிரண் டொன் றளவினம் பிகைமென்
னறுமலர்த் தாளிணை தரிசித்
துற்பவமாகும் பிணியகன் றனரே லுரைப்ப
தெனிருப்பவர்க் குளவே.

பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலாலன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பியவனைத்தும்
உதவலாலன்னை யெக்கலையுஞ்
சொற்றதாலன்னை யுலகொடு வானுந்
தொழுதலாலன்னை யென்றென்றும்
பற்றதாங்கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்.

**வருக!வருகவே!!** **நயினைக்கவிஞர் -ஆ.இராமுப்பிள்ளை**

**பிள்ளைத்தமிழ் வருகைப் பருவம்**

கூவாமௌனப் பயபக்தி
குலையா தளிக்கப் பெரும் பேறு
கொடுப்பா யென்னும் வாய்மையினைக்
கொய்மென் மலர்கொண் டருச்சித்த

தாவா வுரையா விடவரவைச்
சான்றாய்க் காட்டிச் சாயுச்யஞ்
சாரப்புரிந்தா புணர் தொழுகத்
தந்தாய் மனிதர்க் கறிவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவா மருந்தே முக்கணர்க்கு
முழுநாள் விருந்தே முதுமறைகள்
முழங்கும் முதலே நன்னெறியில்
முனைவா ருளத்து நிலைத்தருள

நாவாய் வணிகப் பெருந்துறைசேர்
நயினா நிலத்து நாயகமா
நாகாம் பிகையே வருக மலை
நங்காய் வருக வருகவே!

அரும்பா முனது மோன வெழில்
அகந்தை யிகந்த வுள நோக்கி
ஆனந் தக்கூத் தயருங்கால்
அங்கே சுரந்துன் னருளருவிச்

சுரும்பா யுனது புகழ்பாடச்
சுரர்கண் ணிமைகள் சுருக்கூரச்
சுடரும் கொடியே வருகசதா
சுவைக்கச் சுவைக்க இனிக்குமுழுக்

கரும்பே வருக கலாம்களும்
கமலத் திருவும் வருடுமணிக்
கழலாய் வருக மழலை ரசக்
கனியே வருக பலகோடி

நறுஞ்சீ ரடியார் தினங்கூடும்
நயினா நிலத்து நாயகமா
நாகாம் பிகையே வருகமலை
நங்காய் வருக வருகவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவளர் கேதீச் சரந்தரி கோண சிகரமாஞ்
சிவதல மிரண்டும்
மருவளர் வலக்க ணிடக்கணா யுறலா
னான்றசீ ரீழநா டதனில்
உருவளர் நெற்றிக் கண்ணெனத் தெய்வ
உருத்தலந் தீர்த்தமுற் றொளிரும்
பெருவள நயினைப் பதியமர்ந் தருளும்
பேரருள் நாகபூஷணியே.

ஆரணச் சிரத்துக் கரிய மெய்ப் பொருளே
அனைத்துல கீன்றவம் பிகையே
காரணத் தொழிலைந் தாலுயர் மலினங்
கழுவிடு கருணைமா கடலே
பூரணச் சுகம்பே றளிக்கும் நிதியே
புரந்தர னான்முக னெடிய
நாரணர்க் கரிய சிவமணிச் சுடரே
நயினை வாழ் நாகபூஷணியே.

அறங்களெண் நான்கு முலகிடை வளர்த்த
அருட்பெருஞ் செல்வவா ரமிர்தே
சிறந்திடு முக்கட் கரும்பினின் சுவையே
தேக்குபே ரின்பமாந் தேனே
மறந்திடா வன்பர் சிந்தையிலென்றும்
மன்னிய பேரருள் வித்தே
நிறைந்த சீர் நயினைப் பதியில்வா ழரசே
நிமலையே நாகபூஷணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிற்கோர் அன்னையென ஒளிர்கின்ற தேவி
உனையடைய வருமடியார்க் குற்ற துணையாகி
நிலவுபுகழ் வளர் நயினா தீவிலமர் தாயே
நின்பெருமை யாரறிவார் நிமலனவன் வாமம்
குலவியமர்ந் தருளுதவிச் சமரசமும் காணக்
கொண்டவளே நாகம்மை எண்டிசையும் போற்ற
அலகிலருட் சீர் பெருகும் சித்திரங்கள் மிக்க
அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்!

சிந்துபுடை சூழுமணி பல்லவமென் றின்னும்
சிறந்த மணித் தீவிதுநா கேஸ்வரமே யென்னும்
வந்த நயி னார்தீவு வளர் நாக தீபம்
வளமுதவும் பெயர் நாக பூஷணியே பல் பேர்
தந்தனை நீ தரிசிக்கத் தாயவளே யுன்னைத்
தஞ்சமென வந்தடைவார் தாமடைவார் பேறு
அந்தமுத சுரபி தரும் அம்பிகையே இந்த
அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்!

தெங்குநிரை பிசுமத்தம் சேர்ந்த குளிர் சோலை
சிந்து வழி படர் காற்றுச் சிந்தை மகிழ் வூட்ட
தங்குமிவண் அஞ்சலெனத் தானபயம் காட்டி
தண்ணருளைத் தரும் நாக பூஷணியே தாயே
இங்கு வரும் மக்களவர் எந்நாளும் வாழ்வர்
இறையவனும் சக்தியின்றேல் ஏது செய்ய வல்லான்
அங்கணி செய் மணியொலிக்க ஆனந்த மூட்டும்
அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகபூஷணியம்மை கப்பற் பாட்டு** **சோதிட கலாநிதி-சு.ஐயாத்துரை**

**ஏலே ஏலோ தத்தெய ஏலைஎலோ ஏலைவலி ஏலோயம்மா**

**இராகம் - புன்னாகவராலி** **தாளம் - ஏகம்**

நாலாறு கால் கொண்டு விட்டமதி றுக்கி
நலமான விருதூணை நன்காய மைத்து
மூலமெனு மேராவை முன்னே யிழுத்து
முதுகு குரவளை பீசம்பாய் மரம் நிறுத்தி - ஏலேஎலோ

கோலான வங்குகட் கங்கங்கு ஆணி
கொண்ட டித்தே கூறாப் பாயையு மிழுத்து
நூலான சுக்கான் நேத்திரம் மூக்குகர்ணம்
நுகருவாயுத டெயிறு நோக்க வகுத்து - ஏலேஎலோ

காலான வாயு நான்கானதை யறிந்து
கப்பல் கடலோட்டுநாள் நாட்சரக்கறியே
பஞ்சபா தகமுடன் நெஞ்சமுக் காறு
பாரடங்காக் கோப மாகும் பொறாமை - ஏலேஎலோ

வஞ்சனை செய் சூழ்ச்சி யிறுமாப்புடன் லோபம்
வருமீசையாற் சரிய மாகும் துவேஷம்
துஞ்சலுள விச்சரக்கு ஏற்றாது நாமே
துணைசெய் நாகேஸ்வரியைத் துதித்து வருவோமேல்- ஏலேஎலோ

தஞ்சமென இல்லினொடு புத்திர சம்பத்து
தகுபோக வகையோக வகையும் கடந்து
அஞ்சாது யமனுக்கு மடங்காத கப்பல்
அரனார்தம் திருவடியில் கரையேறு மன்னே - ஏலேஎலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டர் நாயகன் கயிலையிற் றனி முதல் அடியார்
கண்டு போற்றிடு பரம்பொருள் பாகமாய் உறைவாள்
மிண்டி மேல்வரு தவத்திடை உமாவெனத் தாதை
கண்ட பேரினாள் நயினையின் நாகபூஷணியே.

முன்னிரு நாழி கொண்டு மூவுலக களித்த அன்னை
பின்னரு நயினை நாக பூஷணி யாகி நின்று
தன்னருள் வேண்டு மன்பர் தழைத்திட அருளி நாளும்
இன்னமு தூட்டு கின்றாள் சுரபியை பாகம் வைத்தே.

ஆழிமுரசறைய அலவன் குடை நிழற்ற அணிகொள் சங்கம்
ஊழியும் நீங்கா தொலி செய் நயினை தனில் தன் அடியருக்குப்
பாழியும் மேழியும் பாலிக்க வென்று பரமாம் உமையாய்
நாழியும் நீங்கா தருளும் நயினை நாகேஸ்வரியே.

ஆதியாய் நிலவும் அம்மை அறிவுரு வானாள் அம்மை
பேதியா நின்றாள் அம்மை பிறவுவாய் இலங்கும் அம்மை
சோதியாய்ச் சுடரும் அம்மை சுரர்களும் ஏத்தும் அம்மை
பூதியாம் நயினை அம்மை புதுமை நாகம்மை யாமால்

போற்றியோம் அரவம் பூண்டாய் புங்கவி போற்றி போற்றி
போற்றியோம் மதுரை ஆண்ட புராணையே போற்றி போற்றி
போற்றியோம் அரனார் வாம பாகமே போற்றி போற்றி
போற்றியோம் நயினை நாக பூஷணி போற்றி போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நயினை நாகாம்பிகை பதிகம்** **பாரதியடியான்-நயினை. ப.கு.சரவணபவன்**

மாயமிகு பொய்யுலக வாழ்வு சத மன்றிதோ
வாருமிது பாருமென நீள்
வானுயரு கோபுரத் துச்சியிற் றவழுறும்
மழை முகிலின் வாழ்வு கண்டே
நேயமொடுன் மலை வாழ்வின் நினைவு வர வுருகடிமை
நெஞ்சினும் இருகண்ணினும்
நீ வெளிப் பட்டருள்வ தெந்த நாள்?ஏழையேன்
நினைவுமுற் றாது போமோ
சேயாகு மெனையூட்டு முண்ணா முலைப் பெயர்த்
தெய்வமே மலை மருந்தாய்த்
தீராத வெண்பிறவி நோய் மாள வந்தருளு
திவ்ய பிர ணவகுளிகை யே
நாயாகு பிறவியும் நன்றியெனு மாயிலுனை
நரனாயி னேனெண்ண னோ
நாகாம்பி கே நயினை யேகாம்பி கேபரம
நாதாந்த மோன வடிவே.

**நயினைத்திருவிளக்கு** **நயினை பண்டிதர்-நா.கந்தசாமி**

கையா லுனைத்தொழு கில்லேன் என் வாயாற் கசிந்துனது
மெய்யா கிய புகழ் ஓதுகில் லேனிந்த மேதினிமேற்
பொய்யாய் அழியும் சுகங்களை யே யென்றன் புந்தி கொண்டேன்
வையா தருள்குவை யோ வென் நயினை வடிவம்மையே.

அம்மா வுனது திருமுகங் காணா தழுதழுது
வெம்மா வுயிர்த்துயிர்த் தென்னிரு கண்களும் வீங்கினவே
எம்மா னிடத்தினி லென்குறை சற்றே எடுத்தியம்பிக்
கைம்மாறு செய்கிலை ஏனோ? நயினையிற் காரணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொண்டர்க்குத் தொண்டுமானாய்** **சைவப்புலவர்நயினை.நா.விசுவலிங்கம்**

தொண்டு செய் அன்பர் வாழத் துணைபுரி தேவி நீயே
மண்டலத் தெங்கும் உன் போல் மற்றொரு தெய்வம் உண்டோ
கண்டவர் உள்ளமெல்லாம் களிப்புற அருள்செய் வாய் நீ
தொண்டர்க்குத் தொண்டுமானாய் சொற்பதங்கடந்த சோதி.

தொண்டினால் உயர்ந்த அப்பர் சொல்லிய திருவாக்கின் மேற்
கண்டதம் உண்டோ அம்மா கருணையால் உலகங்காக்கும்
தெண்டிரை நயினை வாழ்நற் றேவிநின் னடியார் பாதத்
தொண்டாலால் வேறு முண்டோ தொண்டர்க்குத் தொண்டுமானாய்

**வந்து வரம் தந்தருள்வாய்** **வித்துவான்-நயினைப.க.காமாட்சிசுந்தரம்**

தேவியே நாகபூஷணி யன்பர்
சிந்தையே யினியசெந் தேனே
கூவியே யழைக்கு மடியவர் குறைகள்
கூரருட் கடைக்கணாற் குமைக்கு
மாவியே கயிலைக் கதிபதனின் அமுதே
யலை கடல் சூழ்மணித் தீவில்
மேவியே வேப்பந் தருநிழல் மிழற்றும்
வீதிவாய் எழுந்தருளாயே

நாரணி நாகபூஷணி நயினை
நகருறை நற்றவக் கொழுந்தே
காரணி யிமவான் கண்டந லமுதே
கடைக்கணீ கண்மணி கமலி
பேரணி புவனங் கடந்து நின் றுலகம்
பெற்றநீ யுயிர்க்கெலாம் மாதா
சீரணி பதமெந் தலைமிசைச் சூட்டாய்
தேவியே எங்கள் நாகஈஸ்வரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகபூஷ்ணியம்மை தோத்திரம்**

**நயினை இல்லறஞானிக.இராமச்சந்திரா**

எனக்கென்றோர் தனி வரம் யான் கேட்கவில்லை
என்னினத்தார் வாழ்வொன்றோ கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை யான் ஒரு போதும் மறந்ததில்லை
சினங் கொண்டு தீங்கிழைக்கும் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பிலாத் தாயே!இந்தத்
தரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

முந்நாளில் முருகனுக்குச் சக்தி யீந்தாய்
முனிவர்க்குந் தேவர்கட்கும் முதன்மை யீந்தாய்
பிந்நாளில் சங்கரர்க்கும் பெருமை யீந்தாய்
பேரின்பக் காதல்வளம் பெருக வைத்தாய்
இந்நாளில் இராமகிருஷ்ணர் ரமணர் போன்ற
இணையற்ற ஞானியரை உலகுக் கீந்தாய்
இந்நாட்டைச் சொந்த மென்னும் இரு இனத்தார்
இணங்கி வாழ்ந்திடச் செய்தல் அரிதோ அன்னாய்!

அருளுவாய் அனைத்துயிர்க்கும் அன்னையாகி
ஐந்தொழில்கள் புரி ஆதி சக்தியே நின்
கருணையின்றி கணக்கில்லாக் கஷ்டமுற்றுக்
கதறிநிற்கும் உயிர்களுளத் தீன்று சூழ்ந்த
இருளகல வழியேதும் இல்லை என்ற
ஈடற்ற உறுதியுடன் இந்த ஏழை
உருகி நின்றுன் சந்நிதியில் கேட்டயாவும்
உவந்தளிப்ப துன்கடனாம் ஒப்பில் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி என்று அனுதினமும்
    புரிந்து நால்வே தமுந்துதிக்கத்
தோற்று முலகத் துயிரனைத்தும்
    துன்ப மகன்று நிறைவு பெற
ஏற்று நயினை அமர்ந்தருளி
    இலங்கு நாக பூஷணியே
சாற்று மடியார்க் கேதுதுயர்
    தாயே சிறிது நீ நினைந்தால்.

அன்னையாகி யெவ்வுயிர்க்கும்
    அருளு முணவும் படைத்தளித்துச்
சொன்ன அன்ன பூரணியாய்த்
    துலங்கு நயினை தனிலமர்வாய்
இன்னங் குறைக ளெமக்குண்டோ
    எதிங் கவலம் எங்களுக்கு
உன்ன உன்ன உளமினிக்கும்
    உமையே சிறிது நீ நினைந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொற்பனத் தாண்டவம்** **நயினை தியாகர் அருணாசலம்**

கணபதியும் சண்முகனும் அன்னையோடு
களித்திருந்து கலகலெனப் பேசக் கண்டேன்
அனைத்திலங்கு கங்கையொடு மதியும் கண்டேன்
ஆடரவம் அசைபோட்டு உளரக் கண்டேன்
புனைப்புடனே பரமனொரு ஏறு கண்டேன்
புவியனைத்தும் போந்துவந் திருக்கை கண்டேன்
இணைப்புடைய மான்மழுவும் இலங்கக் கண்டேன்
எழில்நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே

**நயினைப்பத்து** **நயினை.வே. கந்தவனம்**

ஆகு மாதுயர் ஆற்றி டாதுனை
அண்டி வீழடி யார்களின்
வேக வெவ்வினை வீழ்ந்து மாளவும்
மீட்சி யாளவும் காட்சிதந்
தேகமா யிருந் தின்னருள் சுரந்
தென்றுங் காத்திடுஞ் சத்தியே
நாக பூஷணி அம்மை யேநினை
நம்பி னேனருள் இம்மையே.

**வாழ்த்து**

மழை வளங்குக மன்னவன் ஓங்குக
பிழைஇல் பல்வளம் எங்கும் பெருகுக
தளைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்துக் கொண்டு இருக்கும் புண்ணிய பூமியாகிய நயினாதீவில் இறைபக்தியும், அன்பும் பண்பும் கொண்ட உயர் வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த அமரர்களான பொன்னையா சின்னம்மா தம்பதிகளுக்கு மூத்த மகளாக 1927.07.08ம் திகதி பிறந்தார். பெற்றோர் இவருக்கு நாகம்மா என்னும் அன்னை நாகபூசணியின் பெயரையே சூட்டி மகிழ்ந்தனர் அத்துடன் எல்லோராலும் ஆசைப்பிள்ளை என செல்லமாக அழைக்கப்பட்டு வந்தார்.

இளமைக்காலம் முதல் தன் பெற்றோரின் வழிகாட்டலில் நயினாதீவு தில்லையம்பல வித்தியாலயத்தில் கல்வி கற்றார். இளம் வயதில் தனது தாயார் இறந்தமையால் இல்லத்தின் மூத்தபிள்ளை என்பதால் இல்லப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். அன்னார் திருமண வயதை அடைந்ததும் உறவினரான நாகமுத்தன் சின்னாச்சிப்பிள்ளை அவர்களுக்கு கடைசி மகனாகப் பிறந்து இறைபக்தியும், கடமையுணர்வும் கொண்ட ஆசிரியத் தொழிலுக்கு ஓர் இலக்கணமாகத் திகழ்ந்த விசுவலிங்கம் அவர்களை கரம்பிடித்து தன் இல்லற வாழ்வைஇனிதே அரம்பித்தார்.

இல்லற வாழ்வின் நற்பேறாக இராசநாயகம் (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்) தனிநாயகம் (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்) சியாமளாதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துலெட்சுமி (ஆசிரியை கனடா) இரத்தினதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), உமாதேவி (ஆசிரியை கனடா) என ஆறு குழந்தைச் செல்வங்களை பெற்றெடுத்து அன்புடன் வளர்த்தெடுத்தார்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப இல்லற வாழ்வை நல்லறமாக்கி தனது கரம் பிடித்த கணவனுக்கு சிறந்த இல்லற பத்தினியாகவும் புகுந்த வீட்டின் உறவுகளை உரிமையோடு இறுதிவரை அன்பு காட்டி அரவணைத்து வந்தார். இல்லற வாழ்வில் தன் கணவருடன் சேர்ந்து விருந்தோம்பும் பண்பை விருப்புடனே செய்து வந்தார்.

இவர் தமது பிள்ளைகள் திருமண வயதை அடைந்ததும் திருமண பந்தங்களை ஏற்படுத்தி மருமக்களாக மகாலெட்சுமி, சத்தியபாமா, தியாகமணி, திவாகரன், குலசிங்கம், நிபரஞ்சன் ஆகியோரை வாய்க்கப் பெற்றார். இவரின் உடன் பிறந்த சகோதரர்களான காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், நித்தியானந்தம், கந்தசாமி மற்றும் சரஸ்வதி, இளையதம்பி இலட்சுமி, இராசலிங்கம் ஆகியோரையும் திருமண வழி மைத்துன, மைத்துனிகளாக வைத்திலிங்கம், கனகசபை, சின்னத்துரை, இளையதம்பி, வேலுப்பிள்ளை, வீரவாகு, தையலம்மை, சின்னத்தங்கச்சி, வள்ளியம்மை ஆகியோரையும் மைத்துனர் மைத்துனிகளாக திருநாவுக்கரசு, காலஞ்சென்ற தனபாக்கியம் கனகராசா மற்றும் தில்லைநாயகி, பரராசசிங்கம் பத்மநிதி ஆகியோரையும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பிள்ளைகளால் பேரக்குழந்தைகளாக சாம்பவி இராகுலன், ஜனகன். ராம்காந், நிவேதிதா கமலவேந்தன், துஜிக்காந், அபிராமி, பவதாரணி ராஜ்குமார், வானதி ஜனார்த்தனன், வாமதி ஸ்ரீகரன், வேணுஷா, சுகந்தன், லக்ஷிகா. அமுதீசன், அர்ச்சனா, அயிலவன், அட்சரன், திவ்யன், திவ்யா ஆகியோரையும் கண்ணாரக் கண்டு உவகை கொண்டார், பூட்டப்பிள்ளைகளாக லயஸ்ருதி, ஷம்ஸ்ருதி, குமரன், ஹரிப்பிரித்தா, ரித்தீஸ், அபிஷாலினி ஆகியோரையும் பெற்று அகமகிழ்ந்தார்.

இல்லற வாழ்வில் இறை பக்தியையும் விருந்தோம்பும் பண்பையும் விருப்புடனே செய்து வந்தார். நயினைக் காட்டுக்கந்தன் மீது மிகுந்த பக்தி கொண்டவர். அதன் காரணமாக பல வருடங்களாக கந்தசஷ்டியின் ஐந்தாம் நாள் திருவிழாவை வெகு சிறப்பாகச் செய்தமையால் கந்தசஷ்டி நிறைவடைந்த சில மணி நேரத்தில் அன்னாரின் வாழ்வும் நிறைவடைந்தமை அவர் பெற்ற நற்பேறாகும்.

எல்லோருக்கும் வழிகாட்டியாகவும் முன் மாதிரியாகவும் வாழ்ந்து காட்டிய அமரர் நாகம்மாவுக்கு இறுதி மூச்சு நிற்கும் வரை அவர் நினைவிழக்கவில்லை. அறிவுப்பிரவாகம் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது. அவர் இவ்வுலக வாழ்வு போதுமென்று மறுவுலக வாழ்வுக்காக இன்முகத்துடனும், மனநிறைவுடனும் ஆயிரம் பிறைகண்டு தனது தொண்ணூறாவது வயதில் இயற்கையின் நியதிப்படி தனக்கு என்ன நேர்ந்தது என்பதை தானே அறியாமல் தன் உணர்வுகளை தன்னுள்ளே அடக்கி அமைதியாக அம்பிகையின் திருவடிகளில் அடைக்கலமாகி அவளின் பொற்பாதங்களில் சாந்தியாகி பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்புக்கள் வேதனைக்குரியவைதான் என் செய்வது அதனை எவராலும் தவிர்த்துக் கொள்ள முடியாது. ஆனால் அந்தப் பிரிவுத்துயரை தாங்கக்கூடிய மன வலிமையை எல்லோருக்கும் இறைவன் தரவேண்டும் என்ற பிரார்த்தனை ஒன்றே எம்மை ஆறுதல்படுத்தும் அந்த அன்புக்கினியாளுடைய புனித ஆத்மா சாந்தி பெற எல்லோரும் இறையருள் வேண்டி மனமுருகிப் பிரார்த்திப்போமாக.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் வாக்கிற்கமைய வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அமரர் அவர்களும் வானுறையும் தெய்வங்களில் ஒருவராகப் போற்றப்படுவார் என்று அமைதி பெறுவோமாக.

ஓம் சாந்தி!!!

## தாய்

உயிர் கொண்ட கருவுக்கு உரு தந்தாய்
உரு கொண்ட கருவுக்கு மடி தந்தாய்
மடி புகுந்த உருவுக்கு மாதம் தசமும் தந்தாய்
வலியையும் சுகமாக ஏற்றுக் கொண்டாய்
அதிலே நீயும் மன நிறைவும் கொண்டாய்
உன் சுகம் மறந்தாய்
உறக்கம் தொலைத்தாய்
வலி கொடுத்த எம்மையும் பெற்று விட்டாய்
அதிலே நீயும் மகிழ்ச்சியும் கொண்டாய்
உதிரத்தை கொடுத்தாய் பாலாக
அதைக்கொண்டு உயிர்த்தோம் நாளும்
ஊண் கொடுத்தாய் உயிராக
காத்தாய் எமை நீ கண்ணிமையாக
நாம் அழுதால் நீயும் துடித்து விட்டாய்
நாம் சிரித்தால் நீயும் அணைத்துக்கொண்டாய்
உனது உலகமாக எம்மை வளர்த்தாய்
எதைக்கொண்டு நாம் தீர்ப்போம் பிறவிக்கடனை
நடமாடும் உயிர் கொடுத்த தெய்வம் நீயே
தாயே ஆகி வளர்த்தனை போற்றி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக தத்துவம்

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி, நிம்மதி இவ்விடம் சூழ்க

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தை போலொரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே
பாய்ந்து துளாவிய கைகளும் எங்கே
தேசம் அளாவிய கால்களும் எங்கே
தீ உண்டதென்றது சாம்பலும் எங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலும் நாள் ஒன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போலலொரு மாமருந்தில்லை

கடல்தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரைதொடும் தாரைகள் அழுவதுமில்லை
நதிமழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்

பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்.

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரிய கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக்கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயினைப் போற்றும் தத்துவ முத்துக்கள்

01. ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமானவள்.

02. தாயை யாருடனும் ஒப்பிடலாகாது: அவள் ஒப்பற்றவள்

03. தந்தையின் நற்குணம் மலையைவிட உயரமானது. தாயின் நற்குணம் கடலை விட ஆழமானது.

04. எத்தகைய தவறையும் மன்னிக்கும் நீதிமன்றம் ஒன்று உண்டென்றால் அது தாயின் இதயமே.

05. நீங்கள் உங்கள் தாய்க்குக்கூட அடங்காவிட்டால் உங்களுக்காகச் சிறைக்கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும்.

06. தாயின் இதயம் குழந்தைகளின் பள்ளிக்கூடம்

07. எந்தப் பதவியையும் நாம் வகிக்க முடியும். ஆனால் தாயின் இடத்தை யாராலும் வகிக்க முடியாது.

08. ஒரு அன்னை பத்துக் குழந்தைகளைக் காப்பாற்ற முன் வருகிறாள் ஆனால் பத்துக் குழந்தைகளும் ஒரு அன்னை யைக் காப்பாற்ற முன் வருவதில்லை.

09. தாசியோடு செல்பவனையும் கூட தன் மகன் என்று உரிமை யோடு சொல்லும் உயர்ந்த உள்ளம் ஒரு தாயிடம் தான் உண்டு.

10. ஒருவர் தன் இரத்தத்தையே மற்றவருக்குக் கொடுப்பாரென்றால், அவர் தான் தாய்

11. ஒரு குழந்தைக்கு தாய் இருக்குமிடந்தான் சொர்க்கம்

12. தாயைப் பார்த்து மகளை மணஞ்செய்

13. தாயிலே கெட்டவளுமில்லை, சாவிலே நல்லதுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. தந்தை இல்லாக் குழந்தை பாதி அநாதை. தாயிலாக் குழந்தை முழு அநாதை

15. தந்தையின் பாசம் சவக்குழி வரை. தாயின் பாசம் சிரஞ் சீவியானது.

16. அறிவின் தந்தை ஞாபகசக்தி எனில் அதன் தாய் தான் சிந்தனை

17. தாயை அளவிடுவதில் - மனிதர்கள் கவனமாய் இருக்க வேண்டும். ஏனெனில் ஆண்டவன் அவர்கள் கண்ணீரை எண்ணிப் பார்க்கிறான்.

18. உன் அன்பை மனைவியிடம் காட்டு. உன் இரகசியத்தை தாயிடம் சொல்

19. தாயின் இதயம் என்றும் வாடாத மலர்ந்த மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அபரக்கிரியை

அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யப்படும் கிரியை ஆதலால், இது அபரக்கிரியை என்று பெயர் பெறுகிறது. அபரக்கிரியை உத்கிராந்திக் கிரியை முதல் வருட சிரார்த்தம் வரை பல கிரியைகளை உடையனவாம். இங்கே கூறப்படும் கிரியைகள் யாவும் சமய தீட்சை பெற்றவர்களுக்கு மட்டுமே செய்யப்படு வதாகும். சமயதீட்சை இல்லாதவர்கட்கு மந்திர மில்லாது திருமுறையுடன் கிரியை செய்ய வேண்டும் ஆதலால் எல்லோரும் சமய தீட்சை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**உத்கிராந்திக் கிரியை :**

ஒருவர் உயிர் பிரியும் நிலை அடையும் போது மரணவேளை சுற்றத்தவரிடத்து பொருள் இடத்தும் உள்ளபற்றை நீக்கி, விபூதி பூசிச் சிவபெருமானைத் தியானித்துத் தேவாரம் திருவாசகங்களைச் சிவனடியாரைக் கொண்டு பாடக் கேட்க வேண்டும். இவ்வேளை (பசு ) கோதானம் செய்வது சிறந்ததாகும்.

அவருடைய மகன் அல்லது சுற்றத்தவருள்ளே சமய தீட்சை உடையவன் மனம் கலங்காது புண்ணிய தலத்து விபூதி பூசி அவர் உடம்பில் வில்வத்தடி மண்பூசி, அவர் வாயில் கங்கா தீர்த்தம் விட்டு அவர் தலையைத் தம்மடி மீது வைத்து, அவர் செவியில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உபதேசித்து செவியைக் கையினால் மூட வேண்டும். உயிர் நீங்கிய பின், உடலைச் சுத்தி செய்து அலங்காரம் செய்து நிலத்தை தூய்மைப்படுத்தித் தர்ப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பி தெற்கே தலை இருக்கத்தக்கவாறு வளர்த்தவும், காற்பெருவிரல் இரண்டையும் துணியாற் கட்டிவிடவும். இதே போல் கைப்பெருவிரல் இரண்டையும் சேர்த்துக் கட்டவும். வாயைத் தலையுடன் சேர்த்துக் கட்டி விடவும். உப்பைப் பொட்டலமாகக் கட்டிப் பிரேதத்தின் மீது வைத்தலும் பிரதேத்திற்குக் கீழே நீர் நிரம்பிய பாத்திரம் வைத்தலும் உண்டு. உடலை வெள்ளைத்துணியால் முழுமையாக மூடிவிடவும். தலைப் பாகத்திற் குத்து விளக்கு ஏற்றி வைக்கவும். மனைவி, மக்கள், சுற்றத்தவர் அருகில் இருந்து, தேவார திருவாசகங்களைப் பக்தியுடன் ஓத வேண்டும்.

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களும். தனிஷ்டா பஞ்சமி எனப்படும். இப்பஞ்சமியில் ஒருவர் இறந்தால் இதற்குத் தானம், சாந்தி செய்யின் தோஷம் நிவர்த்தியாகும்.

## சூர்ணோற்சவம் வீட்டில் நடைபெறும் கிரியை:

இறந்தவர் வீட்டு முற்றத்தில் பந்தல் அமைத்து, வெள்ளைகட்டி, மாவிலை தோரணம் கட்டல் வேண்டும். இங்கு அமைக்கும் பந்தல் தட்டைப் பந்தலாயும் மேலே வேயப்படும் ஒலை பச்சை ஓலையாகவும் இருக்க வேண்டும். வீட்டு வாயிலிலே மொந்தன்வாழை, குலையுடன் கட்டல் வேண்டும். நிலத்தைப் பசுஞ் சாணத்தால் மெழுகி மண்டபத்தை மூன்றாக பிரித்து மாக்கோலமிட்டு மண்டபத்தின் மேற்கே நடுவில் சிவகும்பமும் சூழ எட்டுக் கும்பமும் வைக்கவும். இறந்தவர் சமய தீட்சராயின் உருத்திர மூர்த்தியையும் விசேட தீக்ஷிதராயின் ஈசுவர மூர்த்தியை யும், நிர்வாண தீக்ஷிதர். ஆசாரி அபிசேகம் பெற்றவராயின் சதாசிவமூர்த்தியையும் நடுக்கும்பத்திலும் சூழ உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பங்களில் ஈசானம் முதல் கிழக்கு வரை ஈசானன், குபேரன், வாயு, வருணன், நிருதி, யமன், அக்கினி, இந்திரன், ஆகியோரைப் பூசிக்க வேண்டும். நடுவே அக்கினி காரியத்திற்கென குண்டம் ஒன்று அமைத்து அதற்குத் கிழக்கே உரல் உலக்கையையும் அதற்குக் கிழக்கில் பேரி தாடனத்திற்காகப் பேரியையும் வைக்கவும் உரல் உலக்கைக்கு மாவிலை கூர்ச்சம். புதிய வஸ்திரம் கட்டி மலர்மாலையால் அலங்கரித்து உரலினுள்ளே அறுகும் மஞ்சள் மாவும் இடவும் உரலைச் சூழ நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம், அபிடேகப் பொருட்கள், இறந்தவர் உடலுக்கு அணியும் உடுபுடவை என்பவற்றை வைக்கவும் உரலுக்கு பக்கத்தே ஒரு கும்பம் வைத்து அதிற் பாசுபதாஸ்திர தேவரைப் பூசிக்கும் படி காரணாகமத்தில் உள்ளது. இக்கும்ப சலத்தில் சுண்ணப் பொடியைக் குழைப்பர். குண்டத்திற்கு வடக்கே மண் குடத்திற் சுடலைக்கு கொண்டு செல்லும் உருத்திர கும்பம் அமைத்தல் வேண்டும். ஸ்நபன கும்பத்திற்குத் தெற்கே புண்ணியாகவாசன கும்பத்தையும் பஞ்ச கவ்வியத்தையும் அமைக்கவும்.

கிரியை செய்வோன் - தந்தைக்கு மூத்த மகன், தாய்க்கு இளைய மகன் கடமை செய்தல் வேண்டும் மகன் இல்லாத போது மனைவி கணவன், மகள், சகோதரன், அவர் மகன், தந்தை, தாய், மருமகன், சகோதரி, சபிண்டன், சமானோத கன், சீடன், குரு, தோழன், அரசன் ஆகிய இவர்களுள் முன்னவர் இல்லாத இடத்தில் அடுத்தவர் கிரியை செய்யலாம். மகன், மனைவி, மகள், தவிர்ந்த ஏனையோர். கிரியை செய்யின் அவர்கள் தந்தை அல்லது தாய்க்குச் கடமை செய்தவராய் இருக்க வேண்டும்.

கர்த்தா (கிரியை செய்வோன்) சவரம் செய்து நீராடி புதிய வஸ்திரம் இரண்டு அணிந்து அனுட்டானம் முடித்தல் வேண்டும் குரு, கர்த்தாவிற்கு வீபூதி கொடுத்து பவித்திரம் அணியச் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபவீதம் இடமாக அணிவித்துச் சங்கற்பம் செய்து கொள்வார். விநாயகபூஜை புண்ணியாக வாசனம் முதலிய கிரியைகளைச் செய்து புண்ணியாக பஞ்ச கௌவியத்தை மண்டபத்தில் தெளித்து இடத்தை சுத்தி செய்து நெற்பொரிகளை மண்டபத்தில் இறைத்துக் கொள்வார். இங்கு கர்த்தாவிற்குப் பஞ்சகவ்வியம் பருகக் கொடுக்கக் கூடாது கிரியை நடைபெறும் போது திருமுறைப் பாடல்களை ஓதுதல் வேண்டும். குரு, அங்க நியாசம், கரநியாசம், சிவோகம் பாவனை செய்து ஸ்நபன கும்பம் பூசை முடித்து அக்கினி காரியம் முடித்து பூரணாகுதி கொடுத்து கிரியையைப் பூர்த்தி செய்வார். கர்த்தாவிடம் நெற்பொரி கொடுத்து அதைப் பிரேதத்தின் மீது போட்டுக் கற்பூர தீபங்காட்டி பின், பிரேதத்தைக் குளிப்பாட்டுவதற்காக வீட்டின் பின்புறம் எடுத்துச் சென்று, தலை தெற்காகக் கிடத்தி ஆசௌசிகள் அரப்பு எண்ணெய் வைப்பர். கர்த்தா மேற்கு முகமாக நின்று நல்லெண்ணெய் அரப்பு என்பவற்றைப் பிரேதத்தின் சிரசில் வைப்பர், பின்பு, அரிசிமா, மஞ்சள்மா, பால், தயிர், இளநீர் அபிஷேகம் செய்து பின் பஞ்சவ்வியம், கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா இடது கைமேல் வலது கையை வைத்துப் பிடிக்க, வேறு ஒருவர் உதவியுடன் கர்த்தாவின் புறங் கையினால் அபிஷேகம் செய்ய வேண்டும். பின் அத்தர், பன்னீர் முதலிய வாசனைத் திரவியம் தெளித்து பிரேதத்தை அலங்காரம் செய்து மண்டபத்திற்கு கொண்டு வரவேண்டும். தலை தெற்கில் இருக்கக்கூடியதாகக் குருக்களுக்கு இடப்புறமாக வைத்து திருநீற்றை நீரிற் குழைத்து சத்தியோசாதம் முதலாக முழந்தாள், தொப்புள், மார்பு நெற்றி, சிரசு, புயம் இரண்டுகள், முழங்கை இரண்டுகள், மணிக்கட்டுகள் இரண்டு, விலாக்கள், முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் உரிய மந்திரத்துடன் பூசி. பன்னீராற் கைகழுவி நீரைப் பிரேதத்தின் சிரசில் தெளிக்கவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் திருநீற்றுப்பதிகம் ஓதல் வேண்டும். சந்தனம் குங்குமத் திலகமிட்டு பூமாலை சாத்தவும்.

**சுண்ணம் இடித்தல்**

பேரிதாடனம் செய்து, அதன்பின் உரலிற் பூமி தேவியையும், உலக்கையில் மேரு மலையையும் பூசித்து (வையகமெல்லாம் உரலாக மாமேருவென்றும் உலக்கை நாட்டி) அறுகு, மஞ்சள்மா என்பவற்றை உரலில் இட்டு எண்பத்தொரு பது மந்திரம் சொல்லி, மூன்றுதரம் இடித்துப் பின் திருவாசகத்தில் உள்ள திருப்பொற் சுண்ணப்பாடல் பாடி இடித்தல் வேண்டும். பஞ்ச புராணம் பாடி நிறைவு செய்து வெற்றிலையில் சுண்ணப்பொடியை எடுத்து உரலுக்குப் பக்கத்தில் உள்ள கும்ப நீர் விட்டுக் குழைத்து, கர்த்தா நெற்றியில் (பொட்டிட்டு) அணிந்து, பிரேதத்தின் இரண்டு கண்களிலும் சாத்தி, மிகுதியை உடல் முழுவதிலும் தெளித்து விடுக. சுண்ணம் இடிக்கும் போது இறந்தவரின் பேரப்பிள்ளைகள் முதலானோர், பிரேதத்தைச் சூழ நின்று தீபங்கள் பிடிப்பர்.

சுண்ணம் இடித்தல் பிரேத ஸ்நானத்திற்கு முன் நிகழ்வது தான் முறையானது. நம்பவர்களின் ஆசாரக் குறைவு கருதி, பிரேத சுத்தியின் பொருட்டு சிவகும்ப ஸ்நானம் முடித்து, அதன்பின்பே சுண்ணப்பொடி தெளிக்கப்படுகிறது.

இறந்தவர் நற்கதி அடைய வேண்டித் தானம் கொடுத்தலும், பிரேத யாத்திரையின் பொருட்டு, யாத்திரா தானமும் நிறைவு செய்து, குருக்களுக்குத் தட்சணை கொடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி மக்கள், சுற்றத்தவர் (பெண்கள்) இடப்புறமாகச் சுற்றி வந்து வாய்க்கரிசி இடுவர், (வாய்க்கரிசி பச்சை அரிசியும் தேங்காய்த் துருவலும் சேர்த்து) மனைவி மக்கள் பிரேதத்தின் பூவடிகளிற் பூப்போட்டு வணங்குவர். கணவன் இறந்தால் மனைவி தாலியைக் கழற்றிப் பிரேதத்தின் நெஞ்சில் வைக்க வேண்டும். சுமங்கலி இறந்தால், நிறைநாளியை (தீபம், நெல் நிறைந்த கொத்து எனும் அளவுக்கலம் சேர்) பிரேதத்தின் கையால் தொடச் செய்து வீட்டின் உள்ளே வைக்க வேண்டும், தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றைச் சேலை முந்தானையில் முடிந்துவிடவும், பிரேதத்தின் கீழே உள்ள துணியையும் மேலே உள்ள துணியையும் சேர்த்து பிரேதத்தை மூடி, தலைப்பகுதியில் ஒரு முடிச்சிடவும், கீழே உள்ள ஆர்க்கைத் துணியால் மூன்றிடத்தில் கட்டவும்.

யாகத்திற்குரிய மரங்களிற் பச்சை மரத்திற் கட்டப்பட்ட பாடையிற் பச்சைத் தென்னை ஓலைப் பன்னாங்கிற் பிரேதத்தைத் வைக்கவும், பாடை கமுக மரத்தாற் கட்டப்படும். பெண்கள் பாடையை இடமாக மூன்று முறை சுற்றி வந்த பின், பிரேதம் மயானத்துக்கு கொண்டு செல்லப்படும். கால்கள் முன்பாக முதல்வரப் பிரேதத்தை எடுத்துச் செல்ல வேண்டும். கர்த்தா கும்பத்துடன் முன்னே செல்ல புகையுடன் கூடிய நெருப்புக் கலத்தை மூன்று காலுடைய உறியில் வைத்து குனிந்த தலையுடன் சுற்றத்தவர் பின்னேவர, வாத்தியம், சங்கு ஒலிக்கத் திருமுறைப் பாடல்கள் பாடியவாறு அஸ்திரமந்திரத்துடன் பொரி தூவியவாறு சுடலையை அடைந்து, தலை தெற்கே இருக்குமாறு பாடையை இறக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி, அந்த சிதாஸ்தானத்தில் தலைதெற்கே இருக்கப் பிரேதத்ததை வைத்துச் சுற்றத்தவர் வாய்க்கரிசி போடவும், சுமங்கலி இறந்தால் அவரின் கணவன் முந்தானையில் முடிந்த தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் என்பவற்றை எடுத்து வைத்து, தேங்காயை உடைத்து தாலியை அவிழ்த்து (கழற்றி) எடுக்கவும். கர்த்தா சிவகும்பத்தை இடது தோளில் வைத்து இடப்புறமாகச் சுற்றி வந்து, தலைப் பாகத்தில் வைத்து, அதன் கழுத்துவரை உடைத்தெடுத்து, கும்ப நீரில் அரிசியை நனைத்துக் காசுடன் தற்புருஷ மந்திரத்தால் வாய்க்கரிசி இடவும். குடத்தையும் கொள்ளியையும் கொண்டு இடமாக மும்முறை சுற்றி வவும், ஒவ்வொரு முறையும் குடத்தில் ஒவ்வொரு துவாரம் செய்து ஒழுகும் நீரை சிதையில் தெளிக்கவும். தலைமாட்டில் தெற்கு நோக்கி நின்று கொள்ளியை வைத்து குடத்தை தனக்கு முன்பக்கத்திற்குப் போட்டு உடைக்கவும். பின் கால்மாட்டிற் சென்று பவித்திரம் உபவீதம் என்பவற்றைக் கழற்றிச் சிதையிற் போட்டு, நமஸ்காரம் செய்து திரும்பிப் பாராமல் நீர்க்கரையை அடைந்து நீராடி, நிவாபாஞ்சலி தருப்பணம் செய்து கொள்ளவும்.

நிவாபாஞ்சலி தருப்பணம், பிதிரர் பொருட்டு இரு கைகளாலும் செய்யப்படும் சல தருப்பணமாகும். இது பாஷான உத்தியா பனத்திலும் செய்யலாம். சுடலையில் இருந்து வீட்டுக்கு வரும் போது ஒரு சிறிய இரும்புப் பொருள் கொண்டுவர வேண்டும். ஏனெனிற் பேய், பிசாசுகள் தொடராமலிருக்க இரும்புக் கத்தியைக் கொண்டு வருவர். சுற்றத்தவரோடு வீட்டு வாயிலுக்கு வந்ததும் வேப்பிலை கடித்து உமிழ்ந்தபின் ஒரு கல்லில் ஏறி உலக்கையைக் கடந்து கைகால் கழுவி, பின் நீராடி, வீட்டைச் சுத்தம் செய்யவும். தூய்மையாய் தயாரித்த சோறு கறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றை இறந்தவருக்குப் படைத்து, தீபமேற்றித் திருமுறை பாடிய பின்னர், உரிமைக்காரருடன் உணவை உண்ணவும், ஆசௌசிகள் (ஞாதிகள்) அல்லாதோர் அங்கு உணவு உண்டால், அவ் ஆசௌசம் முடியும் வரையும் ஆசௌசம் காக்க வேண்டும். அந்தியேட்டி வரை தினமும் இரவில் தீபம் ஏற்றி, நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றையும் வைத்துத் திருமுறைப் பாராயணம் செய்தல் வேண்டும். தாம் உண்பதற்குமுன் பிதுர்பாகம் திருவிளக்கடியிற் படைத்துத் தியானித்து ஆன்மப் பிரிதீக்கு வேண்டிய பின் உணவருந்த வேண்டும்.

## அஸ்தி சஞ்சயனம் (காடாத்து)

தகனம் செய்த அன்று அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாட்களிலும் எலும்புகளை எடுக்கலாம். அங்கு அக்கினி தணிந்திருந்தால் சிவாக்கினி மூட்டிப் பிராயச்சித்தம் ஓமம், தத்துவ ஓமம் செய்யவும், அக்கினி தணியும் வரை நீரை ஊற்றவும், அபிஷேகப் பொருட்களால் காலில் இருந்து உச்சிவரை அபிஷேகம் செய்யவும். பின் சத்தியோசாதம் முதலாம் பஞ்சப்பிரம மந்திரங்களைக் கூறி, முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி. தலை ஆகிய இடங்களில் திருநீறு பூசி, சந்தனம், பூ முதலியவற்றைச் சாத்தி, தூபதீபம் காட்டியபின் முழந்தாள் முதலிய ஐந்து இடங்களிலும் சத்தியோசாதம் முதலான மந்திரம் கூறி, எலும்புகளை சேகரித்து எடுத்து, முக்காலியில் உள்ள பால் நிரம்பிய பாத்திரத்தில் ஒலி உண்டாகாதவாறு போட்டு, பாத்திரத்தின் வாயைப் புதிய துணியால் மூடிக் கட்டவும், மிகுதியாயுள்ள எலும்புச் சாம்பலை அள்ளி, அவ்விடத்தைச் சுத்தி செய்து, பண்படுத்தி நவதானியம் விதைத்து, பால் தெளித்து, குளிரப்பண்ணி வெற்றிலை. பாக்கு, பழம், நெற்பொரி, ரொட்டி, வடை (கோது நீக்கப்பட்டாத உழுத்தில் செய்தது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றைப் பூத பிரேத பைசாசங்களின் பொருட்டு நிவேதித்து, திருமுறை ஓதி, வழிபாடு செய்த பின்னர், எலும்பையும் சாம்பலையும், சமுத்திரம் முதலிய நீர் நிலைகளில் விடவும். அஸ்தியை அந்தியேட்டிக்கோ, அல்லது காசிக்கோ கொண்டு செல்லவென்று எடுத்துவைப்பது முறையல்ல. வீட்டிற்கு வரும்போது வாசலில் வேப்பிலை மென்று உலக்கையைக் கடந்து வருதல் வேண்டும்.

**அஸ்தி சஞ்சயனத்தின் போது கொண்டு செல்பவை.**

அரிசி மாவைப் பிசைந்து 7 ரொட்டிகள் செய்து கொண்டு போக வேண்டும். அத்தோடு, பால், தயிர், மண்முட்டி ஒன்று, வாளி, கத்தி, வாழையிலை, தீவர்த்தி, பழவகை, இளநீர், பாக்கு வெற்றிலை, பூஜைக்குரிய பொருட்கள்.

**தனிஷ்டா பஞ்சமி சாந்தி**

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் இறந்தால் தோஷமுண்டு இதற்குச் சாந்தி செய்ய வேண்டும்.

வீட்டிற் பூர்ண கும்பம் தண்ணீர், பசு. தீபம் இவற்றை மூன்று நாள் இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது பாதுகாக்க வேண்டும். நீற்றுப் பூசணிக்காய் கட்டுதல், வீட்டில் உள்ளவர்கள் கையில் நூல் கட்டுதல் முதலியன நடைமுறையில் உள்ள வழக்கம். பிரேதத்தைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும் போது கமுகம் பிள்ளை ஒன்றும் பிரேதத்தோடு கொண்டு செல்லும் வழக்கமும் உண்டு. சனிக்கிழமை பிரேததகனம் செய்ய நேரிட்டாற் பிரேதத்துடன் கமுகம்பிள்ளை எடுத்துச் செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப நட்சத்திர சுப வாரத்தில், பஞ்சமி சாந்தி செய்யப்படும். அல்லது அந்தியேட்டி அன்று இரவு சாந்தி செய்யலாம். ஆசாரியர் நித்திய கருமம் முடிந்தபின், புண்ணியாக வாசனம், பஞ்சகவ்வியம் ஸ்தானசுத்தி செய்வார். பின் விக்கினேஸ்வரரைப் பூசித்து யமன் பிரதிமையைத் தானம் செய்க.

எருமை வாகனத்துடன் யமனை வெள்ளி அல்லது செப்புத் தகட்டில் வரைந்து சந்தனம், புஷ்பங்கள் சாத்தி, சோடச பூஜை செய்ய வேண்டும். பசு, த்ருணம், சலம் இவைகளை வைத்து இறந்த நட்சத்திர சாந்தி தானங்களைச் செய்க. அவிட்டத்திற்கு வெண்கலப் பாத்திரமும், சதயத்திற்கு எள்ளும், பூரட்டாதிக்கு வஸ்திரமும் (ஆடை), உத்தரட்டாதிக்கு வெல்லமும், ரேவதிக்கு வெள்ளியும் தானம் செய்க.

வீட்டின் நடுவில் இரண்டு படி நெல் பரவி, ஒருபடி அரிசியும், அரைப்படி எள்ளும் காற்படி உழுந்தும் பரவி அதன் மேல் கும்பம் வைத்து அதில் லக்ஷ்மியை ஆவாகனஞ் செய்து, லக்ஷ்மி பிரதிமையை வைத்துப் பூசித்து, கிழக்கு முதல் ஈசானம் வரை திக்கு பாலகர்களைக் கலசங்களிற் பூசித்து, நைவேத்திய தூபதீபம் கொடுத்து அவரவர் மந்திரங்களை ஆயிரம் அல்லது ஐந்நூறாவது செபித்து, கும்பத்திற்கு மேற்கே அக்கினி உண்டாக்கி, அதில் லக்ஷ்மிக்கும் திக்குப் பாலகர்களுக்கும் ஆகுதி செய்க. நவக்கிரக ஓமம் செய்து கர்த்தாவை கிழக்கு முகமாக இருத்தி, கும்ப நீரால் அபிஷேகம் செய்து, பஞ்சகவ்வியம் பருகக் கொடுக்கவும். பின் தானம் கொடுத்து, ஆசாரியரைப் பூஜை செய்யவும். இது அபரக்கிரியா விதி வியாக்கியானத்திற் கூறப்பட்டது. இக்காலத்தில் நடைமுறையில் உள்ள சாந்தி மேல்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியோட்டி அன்று இரவு வீட்டு முற்றத்திற் பந்தலிட்டு வெள்ளை கட்டி. மாவிலை தோரணத்தால் அலங்கரித்து நிலத்தை மெழுகிச் சாந்தியை ஆரம்பிப்பர்.

விக்கினேஸ்வரர் பூஜை, புண்ணியாகவாசனம், பஞ்சகவ்விய பூஜை முடித்து முறத்தில் (சுளகு) அரிசிமா, மஞ்சள் மா, கரிமா, இலை (பச்சை)மா, செங்கல் (சிவப்பு) மா இவற்றால், சிதாஸ்தானபதம் வரைந்து இதிற் பஞ்சததத்துவங்களையும் பூசித்து அரிசிமா அல்லது தர்ப்பையினாற் செய்த புத்தளிகையை (உருவம்) வைத்து, இறந்த நட்சத்திரத்திற் குரிய மந்திரங்களால் பூசித்து. அக்கினி உண்டாக்கி, ஆகுதி, பலி, பூர்ணாகுதி கொடுத்து நிறைவு செய்து முறத்துடன் புத்தளிகையைச் சுடலைக்குக் கொண்டு சென்று தகனம் செய்து சாம்பலை நீர்நிலைகளில் கரைத்து வீட்டிற்கு வந்து நீராடி, அனுட்டானம் முடித்த பின் சிவன், வர்த்தனி, லக்ஷ்மி, நவக்கிரக தேவர்களையும் பூசித்து, கர்த்தாவிற்கு சிவன் வர்த்தனி கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். அதன் பின் தானம் கொடுக்கவும்.

வெண்கலமாயின், ஐந்து பலமும், எள் எனின் இரண்டு படியும். வஸ்திரம் எனின் இரண்டும், வெல்லமாயின் பத்து பலமும், வெள்ளி எனின் ஒரு பலமும் தானம் செய்யவும். அவிட்டத்திற்கு ஆறு மாதம் சதயத்திற்கு மூன்று மாதம், பூரட்டாதிக்கு ஒன்றரை மாதம், உத்தரட்டாதிக்கு ஒரு மாதம் ரேவதிக்கு பதினைந்து நாட்கள் தோஷமாகும்.

**எட்டுச் செலவு :**

எட்டுச் செலவு என்ற கிரியை பத்ததி, ஆகமங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றிற் குறிப்பிடப்படவில்லை. தேச வழமையில் உள்ள கிரியையாகும். இறந்த நாளில் இருந்து ஏழாம் நாளிற் செய்யப்படும். தேவை கருதி ஐந்தாம் நாளிற் செய்வதும் உண்டு. இறந்தவர் விரும்பி உண்ட உணவு வகை யாவும் படைக்கும் பேருணவுப் படையல் படைத்து, தீபம் காட்டி, அவ்வளவு வகைகளிலும் சிறு பகுதியை எடுத்து, தீப்பந்தம், இளநீருடன் சந்தியில் வைக்கும் வழமை உண்டு. இது பகல் வேளையில் நடைபெறும். சில இடங்களில் இரவு வேளையில் நடத்துவர். இதில் மாமிச உணவு, மதுபானம் என்பன படைத்தல் தவறு. இறந்தவரடைய ஆன்மா சிவலோக யாத்திரை செய்யும் போது கடமை செய்தவரும் வீடும் புனிதமாக இருக்க வேண்டும் என்பதால் 31 நாட்களும் மாமிச உணவைத் தவிர்க்க வேண்டும். எட்டுச் செலவுவரை வீட்டில் எண்ணெயில் பொரித்த உணவு வகைகள் தயாரிப்பதில்லை.

## அந்தியேஷ்டி

அந்தியேஷ்டி என்பது இறுதியாகச் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்தியேஷ்டியினால் சமய ஆசாரம், அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகள் நிவர்த்தியாகும்.

அந்தியேஷ்டி - சமய அந்தியேஷ்டி, விசேஷ அந்தியேஷ்டி, நிர்வாண அந்தியேஷ்டி என மூன்று வகைப்படும். இது சமய, விசேட, நிர்வாண தீட்சை உடையவர்களுக்கு, அவர்கள் பெற்ற தீட்சை வகையிற் செய்யப்படும். விசேட நிர்வாண அந்தியேஷ்டியும், சைவ ஆசாரம் உடைய புலால் உண்ணாத சமய தீட்சை உடைய சைவர்களுக்கும் செய்யப்படும். சமய அந்தியேஷ்டியும் பிரேதத்திற் சுடலையிற் செய்யப்படும். ஏனையோருக்குச் செய்யப்படும் சமய அந்தியேஷ்டி, ஆசௌச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவில் 31ஆம் நாளிற் செய்யப்படும். இதை இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் என்பர். மகன் தவிர்ந்த ஏனையோர் கடமை (கொள்ளி வைத்தல்) செய்தால், அந்தியேஷ்டி (தர்ப்பை கடல்) நாள் பார்த்துத்தான் செய்ய வேண்டும். நந்தை, பத்ரை, திரயோதசி தவிர்ந்த திதிகளுள் செவ்வாய், வியாழன், வெள்ளி தவிர்ந்த வார லக்கினங்களும், திரிபாத நட்சத்திரம் தவிர்ந்த ஏனைய நட்சத்திரங்களிலும் பாபக்கிரகம் பலமுண்டான சமயத்தில் இக்கருமம் செய்யலாம். (காலவிதானம்) நந்தை - பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி, பத்ரை - துதியை, ஸ்ப்தமி, துவாதசி, திரிபாத நட்சத்திரம், கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி) 26 ஆம் நாளுக்கு மேல் 31 ஆம் நாள் வரையில் அந்தியேஷ்டி செய்யலாம்.

சுடலை, ஆற்றங்கரை, குளக்கரை, சமுத்திரக்கரை, வீடு (கிணற்றடி) ஆகிய இடங்கள் அந்தியேஷ்டி செய்வதற்கு உகந்த இடங்களாகும். ஒன்பது முழம் முதல் குறைந்த பட்சம் ஐந்து முழ நீள அகலங் கொண்ட மண்டபம் அமைத்தல் வேண்டும். இம் மண்டபத்திற்கு பதினாறு அல்லது பன்னிரண்டு அல்லது நாலு கால்கள் அமைய வேண்டும். மேலே வெள்ளை கட்டி, விதானம், தோரணம், பூமாலைகளால் அலங்கரித்து நான்கு திசைகளிலும் வாயில் அமைத்து, தெற்கிற் பிரதான வாயில் அமைத்து சாணத்தினால் நிலத்தை மெழுகி, மண்டபத்தை ஒன்பது பதமாக்கவும்.

நடுப்பதத்தில் ஓம குண்டமும், வடமேற்கில் சிவகும்பமும், வட கிழக்கில் வர்த்தனி (பாசுபதாஸ்திர) கும்பமும், தென்மேற்கிற் பஞ்சகவ்விய மேடையும், தென்கிழக்கிற் சிதாவஸ்து தானம் (பிரேத தகன இடம்) ஆகியவற்றையும் சுற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதிகையில் ( மண்டபத்தின் சுற்றுப்புறத்தில் ) தசாயுத கும்பங்களையும் அமைத்துக் கொள்ளவும்.

சிதாவஸ்து தானத்தை வடக்குத் தெற்காக, நீண்ட சதுரமாக்கி, இருபத்தைந்து பதமாகப் பிரித்து, நடுப்பதம் ஐந்திலும் மஞ்சள் மாவும், தென் மேற்கில் நாலு பதத்தில் வெள்ளை மாவும், வடகிழக்கில் நாலு பக்கத்திற் கறுப்பு மாவும், வட மேற்கில் நாலு பதத்தில் பச்சை மாவும், வடக்கில் உள்ள ஒரு பதத்திற் சிவப்புமாவும், மேற்கில் உள்ள ஒரு பதத்தில் வெள்ளை மாவும், தெற்கில் உள்ள ஒரு பதத்திற் கறுப்பு மாவும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில் மஞ்சள் மாவும் இட்டுக்கொள்ளவும்.

புத்தளிகை (பிரேதம் போலச் செய்யும் தருப்பை) முப்பத்தாறு தர்ப்பைகளால் முறுக்கி, இடப்பக்கமாக முடிந்து, ஐவைந்து தர்ப்பைகளால் கைகளும் பதின்மூன்று தர்ப்பை களாகப் பிரித்து கால்களையும் ஆக்க வேண்டும்.

ஆசாரியார் நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து, தெற்கு வாயிலால் மண்டபத்துட் புகுந்து, சிவகும்ப வேதிகைக்குத் தெற்கே வடக்கு நோக்கி இருந்து, கர்த்தாவிற்குத் திருநீறு கொடுத்து, சங்கற்பம் செய்து கொண்டு, சளீகரணம், பூத சுத்தி, மந்திர சுத்தி, அந்தர்யாகம், சிவகஸ்தம் செய்து, சிவோகம் பாவனை முடித்து, ஞானகட்க தாரணம் செய்தல் வேண்டும். பஞ்சகவ்விய பூசை முடித்து, யாக மண்டபத்தையும், கர்த்தாவையும் புத்தளிகையையும் பஞ்சகவ்வியத்தால் (புரோட் சித்தல்) தெளித்தல் வேண்டும். சூர்ணாற்சவம் செய்து, சுண்ணப்பொடி சாத்திப் புத்தளிகைக்கு அபிடேகம் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பதினெட்டு சமஸ்காரங்களையும் மனத்தினாலே செய்து, நெற்பொரி முதலியவற்றை மண்டபத்தில் தூவி, மிகுதியை ஈசானத்தில் பாசுபதாஸ்திர வர்த்தனி ஆசனத்தில் இடவும்.

## சிதாவஸ்து பூஜை

நடுப்பதம் ஐந்திலும் பிருதுவி தத்துவத்தையும், பிரம்மாவையும் தென்மேற்கு மூலையில்
நான்கு பதத்திலும் அப்பு தத்துவத்தையும், விஷ்ணுவையும் தென்கிழக்கு மூலையில்
நான்கு பதத்திலும் தேயு தத்துவத்தையும், உருத்திரனையும் வடமேற்கு மூலையில்
நான்கு பதத்திலும் வாயு தத்துவத்தையும், மகேஸ்வரனையும், வட கிழக்கு மூலையிலும்

ஆகாச தத்துவத்தையும் சதாசிவனையும், வடக்கில் உள்ள ஒரு பதத்தில், குபேரனையும் மேற்கில் உள்ள ஒரு பதத்தில், வருணனையும், தெற்கில் உள்ள ஒரு பதத்தில், யமனையும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில், இந்திரனையும் பூசித்து, பழம் தாம்பூலம் நிவேதித்து, நீராஞ்சனம் செய்தல் வேண்டும்.

வர்த்தனி பூஜை செய்து, பாசுபதாஸ்திர பூஜை செய்து, ஞானவாளை ஒப்புக்கொடுத்து, யாகத்தைக் காத்து ரட்சிக்கும்படி வேண்டியபின், தசாயுத பூஜை செய்ய வேண்டும். வடகிழக்குத் திசை முதல் கிழக்குத் திசை வரையுள்ள எட்டுக் கும்பத்திலும் சூலம், கதை, துவசம், பாசம், கட்கம், தண்டு, சக்தி, வச்சிரம் ஆகியவற்றையும் வடகிழக்கில், தெற்கில் உள்ள கும்பத்திற் பத்மத்தையும், தென்மேற்கில் வடக்கே உள்ள கும்பத்திற் சக்கரத்தையும் பூசித்து, தசாயுத தேவர்களிடம் யாகம் முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை பாதுகாக்க வேண்டும் என சிவாஞ்ஞையைத் தெரிவித்தல் வேண்டும். பின்னர் சிவகும்ப பூஜை, சிவாக்கினி காரியம், பிராயச்சித்த செபம், நாடீசந்தானம், மிருதக தீட்சை செய்து சிதாவாஸ்து தானத்தில் பூசித்த ஐவகை மாவையும் இட்டு, அதன் மேற் புத்தளிகையை வைத்து வாய்க்கரிசியிட்டு, கொள்ளி வைத்துக் குடம் உடைத்து, தகனம் செய்த பின்னர், காடாற்றி, புத்தளிகைச் சாம்பலை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும்

## நக்னதானம்

இறந்தவருக்கு ஏற்படக்கூடிய பசி, தாகம், குளிர் (ஆடை இல்லாத குறை) போன்றவற்றை நீக்கும் பொருட்டுச் செய்யப்படும் தானம் நக்னதானம் ஆகும். குடும்பத்தவராய் உள்ள ஆசாரியருக்கு, அரிசி, வஸ்திரம் முதலியவற்றைத் தானமாகக் கொடுக்கவேண்டும். உயர்தீட்சை உடையோருக்கு, பிரேத தகனம் செய்த உடன் இத் தானம் கொடுக்கப்படும்.

## துர்மரணப் பிராயச்சித்தம்

இயற்கையாக உயிர்பிரியாது தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்ளல் அல்லது வேறு ஏதுக்களால் உயிர்பிரிதல் துர்மரணம் எனப்படும். நீரில், நெருப்பிற்பாய்தலால், நஞ்சு உண்டலால், பாம்பு கடித்தலால், ஆயுதங்களால், விலங்குகளால் ஏற்படும் இறப்பு துர்மரணமாகும்.

இது புத்திபூர்வம், அபுத்திபூர்வம் என இருவகைப்படும். புத்திபூர்வம் தானேதான் உயிரைப் போக்கிக் கொள்வது. அபுத்திபூர்வம் எதிர்பாராத விதமாக உயிர்பிரிதல், அபுத்திபூர்வ துர்மரணத்திற் சாதரண மரணம் போலவே கிரியையும் ஆசௌசமும் கொள்ளப்படும். இதில் தேகம் பின்னப்பட்டிருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசௌச முடிவில், பிரதித்தேகத்தில் (புத்தளிகையில்) புனர்தகனம் அந்தியேட்டி செய்ய வேண்டும். புத்திபூர்வ துர்மரணத்தில் சாதாரண அக்கினியில் தகனம் செய்து ஒரு வருடம் அல்லது ஆறு மாதம் அல்லது மூன்று மாத முடிவில், இறந்த திதியில் தர்ப்பையாற் செய்யப்பட்ட பிரதித் தேகத்தில் அந்தியேட்டி செய்து கொள்க. துர்மரண மடைந்தோர் பைசாச ரூபத்தில் அலைவர். ஆதலால் பைசாச புவனத்திற்கு அதிபதி யாகிய வைரவருக்குச் சாந்தி செய்த பின்பே அந்தியேட்டி செய்யப்படும்.

**பாஷாணத்தாபனம்**

இறந்தவருடைய ஆன்மாவைக் கல்லிலே பூசித்தல் பாஷாண பூஜை எனப்படும். (பாஷாணம் -கல் ) இதிற் செய்யப்படும் கிரியைகள் ஆன்மாவின் பசி, தாகம், நீங்கும் பொருட்டும். பிரேத வடிவம் நீக்கும் பொருட்டும். ஆன்மாவின் உணவு விருப்பங்களைப் பூர்த்திசெய்யும் பொருட்டுமேயாகும்.

இக்கிரியை வீட்டில் மண்டபம் அமைத்து விரிவாகச் செய்யலாம். பிரேதத்தில் அந்தியேட்டி செய்பவர்கள், வீடடிலே பாஷாணத் தாபனம் செய்து, விரிவாகப் பூஜை நிகழ்த்துவர். இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் நிறை வெய்தியதும் அந்தியேட்டி மடத்திலேயே இக் கிரியை நிகழ்கிறது.

மண்டபத்தில் வேதிகை அமைத்து, வேதிகையில் வடக்குமுகமாக ஒரு கும்பம் வைத்து, அதில் இறந்தவர் தீட்சைக்கு ஏற்றதுபோல, உருத்திரர், ஈசுவரர், சதாசிவர் என்பவரில் ஏற்றவரைப் பூசித்தல் வேண்டும். ஒரு பாத்திரத்திலே கல்லினைக் கூர்ச்சங் கட்டி வடக்கு முகமாக வைத்து, அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவருடைய ஆன்மாவை ஆவாகனம் பண்ணி, எண்ணெய், அரிசிமா முதலான அபிடேகத் திரவியங்களால் அபிடேகம் செய்து, வஸ்திரம் சாத்தி, பூஜை தர்ப்பணம் செய்தல் வேண்டும். தர்ப்பணம் வாசோதகம், திலோதகம், குசோதகம் என மூன்று வகையுண்டு. புதுச் சோலையோடு சேர்த்துத் தர்ப்பணம் செய்வது, வாசோதகம். எள்ளுடன் சேர்த்துத் செய்வது திலோதகம், தர்ப்பையுடன் சேர்த்துத் செய்து குசோதகம். தர்ப்பணம் முதல்நாள் மூன்றும், இரண்டாம் நாள் நான்கும் என்ற வகையில் ஆசௌச முடிவுநாள் வரை செய்தல் வேண்டும். முப்பது நாள் ஆசௌசிகள் 525 தர்ப்பணம் செய்தல் வேண்டும். நாளுக்கு ஒன்றாக ஆசௌசக் கணக்கிற் பிண்டம் இடல் வேண்டும்.

நவசிராத்தம், ஏகோத்தர விருத்தி, தர்ப்பணம், சங்கிதா சிரார்த்த தானம் என்பன முறைப்படி செய்தல் வேண்டும். மூன்றுக்கும் தட்சணை கொடுக்க வேண்டும்.

**நவசிரார்த்தம்**

இது முதல்நாட் தொடங்கி, ஒற்றித்த நாட்களிற் செய்யப்படுவது ஒழுக்கமுள்ள அந்தணர் ஒருவரை அழைத்து, இறந்தவருடைய ஆன்மா நற்கதியடைய வேண்டியதானம் கொடுத்து, அவரிடம் தான, பல தீர்த்தத்தை வாங்கிப் பாஷாணத்தின் மீது விடுவதன் மூலம், இறந்த ஆன்மாவிற்கு, பிரேதத் தன்மை நீங்கி நற்கதி கிடைக்கும்.

**சங்கிதா சிரார்த்தம்**

பதினொரு மந்திரங்களில் நேத்திரம் ஒழிந்த பத்து மந்திரங்களைப் பத்து சீலமுள்ள அந்தணர்களில் ஆவாகித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குச் செய்யும் தானமாகும். இதனால் தீட்சையின் பின் ஏற்பட்ட ஆசார அனுட்டானக் குறைகள் நீங்கும், உருத்திரபலி இட்டு அதன்பின் பிரபூத பலி எனப்படும் பேருணவு படைத்து, தீபாராதனை, தோத்திரம் செய்தல் வேண்டும். இறந்தவர்மேல் பாடப்பட்ட சரமகவி (கல்வெட்டு) பாடி, சுற்றத்தவர் பூவும், நீரும் இட்டு அஞ்சலி செலுத்தல் வேண்டும்.

கல்லிலே பூசித்த ஆன்மாவைக் கும்பமூர்த்தியிடத்தும், கும்ப மூர்த்தியை அதற்குரிய இடத்திலும் ஒடுக்கி, கும்பம், கல் பிண்டம், சாம்பல் முதலியவற்றை வாத்திய ஒலியுடன் சமுத்திரம் முதலான நீர் நிலைகளில் விடுக.

நீர் நிலையில், மார்பளவு தண்ணீரில் வடக்கு முகமாக நின்று, பிண்டத்தை முதலிலும், கும்பத்தை அடுத்தும் பாஷாணத்தைப் பின்னருமாக விட வேண்டும். நீராடிவிட்டு வீட்டிற்கு வரவேண்டும்.

வீட்டு வாசலில் வேப்பிலையைத் தின்று துப்பி, ஆசமனம் செய்து, அக்கினி, தண்ணீர், கோமயம், வெண்கடுகு இவைகளைத் தொட்டு உலக்கையைக் கடந்து, கால்கை கழுவி, வீட்டினுட் செல்லவும்.

இதுவரை கூறிய கிரியைகள் சைவக் குருக்கள் செய்வதும் மேற்பட்ட வீட்டுக் கிரியைகளைப் பிராமணக் குருக்கள்மாரும் செய்வதும் நடைமுறையில் உண்டு.

**துடக்குக் கழிவு**

எமக்கு ஆசௌசம் முப்பது இரவுகள் முப்பத்தோராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்காலையில் தான் துடக்குக் கழிவு நிகழ வேண்டும் சைவ போசனமுடையவர்கள் வேறு மாமிசம் உண்பவருடன் கலப்பின்றி இருந்தால் பதினாறாம் நாளில் ஆசௌசம் நீங்கும்

அந்தியேட்டி செய்பவர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்னர் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து அனைவரும் நீராடி பிராமணக் குருக்களைக் கொண்டு புண்ணியாக வாசனம் செய்து ஆளெசம் நீக்கலாம். இதன் பின்னர் தான் பாஷாண (கல்லடி) ப் படையலுக்கு உணவு தயாரித்தல் வேண்டும். அசௌசம் நீங்கிய மறுநாளில் ஏனைய கிரியைகளை செய்யலாம்.

**வீட்டுக்கிரியை**

வீட்டு முற்றத்தில் மெழுகி பூரணகும்பம் (நிறைகுடம்) வைத்து, தீபம் ஏற்றி பிள்ளையார் பிடித்து வைத்து, வாயிலில் மாவிலை கட்டவும், வீட்டுக் கிரியைகளில் முதலில் சங்கல்பம் செய்து, விக்கினேஸ்வர பூஜை, தீபதேவி பூஜை, பஞ்சகவ்விய பூஜை, வருண கும்ப பூஜை என்பன நிறைவேறிய பின் கர்த்தாவிற்கு பஞ்சகவ்வியம் பருகக் கொடுக்கப்படும்.

**அனுஞ்சை**

ஒரு வாழை இலையில் மூன்று தர்ப்பை, பவித்திரம், எள்ளு, தாம்பூலம், உபவீதம், காசு என்பவற்றை, கர்த்தா தலையில் வைத்து இடப்புறமாக மூன்று முறை சுற்றி, இன்ன வருடம், அயனம் ருது, மாதம், பட்சம், நட்சத்திரம், திதி, வாரம் கூடிய சுப தினத்திலே இன்னாருக்குச் சிரார்த்தம் செய்கின்றேன். அதற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று குருவினிடம் வேண்ட, அவர் அதிகாரம் தந்தோம் என்று கட்டைத் தர்ப்பையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தாவிடம் கொடுக்க, அதைக் கர்த்தா இடுப்பிற் சொருகிக் கொள்வர். பின்னர் வலது கை மோதிர விரலிற் பவித்திரத்தையும் வலத்தோளில் உபவீதத்தையும் அணிந்து கொள்ளவும்

**சூரியபூசை**

சிவப்பு நிறப் பூவும் நீரும் கொண்டு, மூன்று முறை ஆத்ம பிரதட்சணம் செய்து, சூரிய மூர்த்தியை வணங்கிச் செய்யப்போகும் சிரார்த்தத்திற்குச் சாட்சியாக இருந்து அருள வேண்டுமெனப் பிரார்த்தித்து, முற்றத்தில் வைக்கப்பட்ட கும்பத்திற் பூவையும் நீரையும் போட்டு வழிபடவும்.

தந்தைக்கு அல்லது தாய்க்கு இடபதானம், ஏகோதிட்டம், பஞ்சதச (பதினைந்து) மாசியம், சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம் என்பன செய்யப் போகின்றேன் என்று சங்கற்பம் பண்ணிக் கொள்ளவும்.

**இடபதானம்**

இறந்தவருடைய தான தருமங்களின் பலனைத் தருமத்தின் வடிவாயுள்ள இடபத்தின் மூலமாகச் சிவபெருமானிடம் சேர்க்கும் பொருட்டு இடபதானம் செய்யப்படும். இடபம் (ஆண்மாடு) தானம் செய்ய வசதிப்படாத இடத்து, ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி, அதில் இடபத்தின் வடிவை எழுதி, அதன்மேல் தேங்காய் வைத்து, கர்த்தா அத்தாம்பாளத்தை நாலு திசையிலும் இழுத்து உரிய மந்திரங்களைக் கூறித் தட்சணையுடன் அதை ஓர் அந்தணருக்குத் தானமாகக் கொடுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏகோதிட்டம்

இது இறந்தவர் ஒருவரை மட்டும் குறித்துச் செய்யப்படும் தானமாகும். அந்தணர் ஒருவரை அழைத்து, மேற்கு முகமாக ஆசனத்தில் இருத்தி அவருக்கு ஸ்நானத்திற்கு வேண்டிய நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம் கொடுத்து நீராடிய தாகப்பாவணை செய்து, வேட்டி சால்வை சந்தனம் பூ என்பவற்றைச் சாத்தி, அரிசி, மரக்கறி என்பவற்றைக் கொடுத்துப் பூசிக்கவும்.

தரையைச் சுத்தம் செய்து, வாழை இலை போட்டு, ஒரு தருப்பையைத் தெற்கே நுனி இருக்கும் வண்ணம் வைத்து, ஒரு பிண்டம் இடவும். பச்சை அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், நெய், தேன் வாழைப்பழம் ஆகிய எட்டு, பொருட்கள் சேர்த்து உருட்டிப் பிண்டம் செய்யப்படும். கர்த்தா தெற்கு முகமாக இடது முழந்தாளையும் இடது கையையும் ஊன்றியிருந்து, கைமாறிப் பிண்டம் இடவும். சந்தனம், பூ சாத்தி, வெற்றிலை, பாக்கு, பழம், இளநீர், நைவேத்தியம், நிவேதித்து, தர்ப்பணம் செய்து நமஸ்காரம் செய்து கெண்டு, தமது சக்திக்கு ஏற்றவாறு தானம் கொடுக்கவும். இத் தானத்தினால் ஆன்மா உலக வாழ்வில் ஓரளவு திருப்தி யடையும். இதில் இருபத்திநாலு தானங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

அவையாவன: பவித்திரம், புணூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை (மிதியடி), தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம் (சால்வை), வஸ்திரம், பொன், மோதிரம், இரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருட்கள், சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருட்கள், தாசீ, தாசர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவாம். ஏகோதிட்டம் ஏற்ற குருவிற்கு தானம், தட்சணைகளைக் கொடுத்து, வழி அனுப்பி, மஞ்சள் நீர் தெளித்து, இடத்தைச் சுத்தம் செய்து கர்த்தா கைகால் கழுவி அல்லது நீராடி வந்து பஞ்ச கவ்வியம் பருகிக் கொள்ளவும்.

**மாசியம்**

இறந்த வருடத்தில் மாதந்தோறும் செய்யப்படும் சிரார்த்தமே மாசிகமாகும். இது மாதந்தோறும் இறந்த திதியிற் செய்யப்படும். முதல் மாதத்திற்குரிய மாசிகம் ஏகோதிட்டம் என்ற பெயரில் முதலிற் செய்யப்பட்டது. இரண்டாம் மாதம் தொடக்கம் பதினொரு மாத மாசிகமும், ஊனமாசிகம், ஊனதிரிபட்ச மாசிகம், ஊனசாண் மாசிகமும், ஊன ஆப்திக மாசிகமும் ஆகப் பதினைந்து மாசிகம் செய்தல் வேண்டும்..

| | |
|---|---|
| 1.ஊனமாசிகம் - | இறந்தநாள் முதல் இருபத்தேழு நாளின் மேல் மூன்று நாட்களுட் செய்யப்படுவது |
| 2.ஊனதிரிபட்ச மாசிகம் | அவ்வண்ணம் நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்தாம் நாளுக்கிடையிற் செய் யப்படுவது. |
| 3.ஊனசாண் மாசகம் | மேற்கூறப்பட்டபடி நூற்றுஎழுபதாம் நாள் முதல்நூற்றெண்பதாம் நாட்களுக் கிடை யில் செய்யப்படுவது |
| 4. ஊனஆப்திக மாசிகம் | அவ்வாறே முந்நூற்றைம்பதாம் நாள்முதல் முந்நூற்றைம்பத்தைந்தாம் நாட்களுக் கிடையிற் செய்யப்படுவது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதந்தோறும் செய்யும் பதினொரு மாசிகங்களும் இறந்த திதியிற் செய்யப்படும் ஊன மாசிகங்கள் நான்கும் தோஷங்கள் இல்லாத நாளிற் செய்யவேண்டும். வெள்ளிக்கிழமையிலும் நந்தை, சதுர்த்தசி, அமாவாசை என்னும் திதிகளிலும், கார்த்திகை, ஆயிலியம், பூரம், கேட்டை, மூலம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களிலும் திரிபுஷ்கரயோகம், துவிபுஷ்கர யோகம் என்பவற்றிலும் ஊனமாசிகம் செய்தல் ஆகாது.

(துதியை, சப்தமி, துவாதசி என்னும் திதிகளும் கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி, என்னும் நட்சத்திரங்களும் ஞாயிறு, செவ்வாய், சனி, என்னும் வாரங்களுமாகிய மூன்றும் கூடுவது திரிபுஷ்கர யோகம். இரண்டு கூடுவது துவிபுஷ்கரயோகம்)

பதினைந்து மாசிகங்களும் செய்ததன்மேல் வருட முடிவிற்றான் சபிண்டீகரணம் செய்தல் வேண்டும். ஆயினும் கர்த்தாவின் அசௌகரியங்களை உத்தேசித்து ஆசௌச முடிவிற் பதினைந்து மாசிகங்களையும் செய்து முடிப்பர். இப்படிச் செய்தாலும், பின்னரும் உரிய காலத்தில் மாசிகங்களைச் செய்வது சிறந்ததாகும்.

### சோதகும்ப சிரார்த்தம்

இது நீர் நிரம்பிய பாத்திர (உதகம் -நீர் ) தானமாகும். இறந்த ஆன்மாவின் தாகம் தீரும் பொருட்டு, இறந்த நாள் முதல் வருடம் முந்நூற்றி அறுபத்தைந்து நாளிலும் இத்தானம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்ய வசதி ஏற்படாததால் இப்போது சபிண்டீகரணத்தின் முன் சோதகும்பதானம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபிண்டீகரணம்**

பண்டங்களை ஒன்று சேர்த்தல் சபிண்டீகரணம் ஆகும். இதிலே பிதிர் வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், மாத்ரூ வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் நிமித்த ( இறந்தவருக்கு) ருக்கு ஒரு பிண்டமும் இடப்படும். நிமித்த பிண்டத்தைப் பிதிர் பிண்டத்துடன் சேர்ப்பதால் இறந்த உயிர் பிரேதத்தன்மை நீங்கிப் பிதிர்த்தன்மையும் சிவலோகப் பேறும் அடையும். சபிண்டீகரணத்தின்மேற் செய்யும் சிரார்த்தங்களில், நிமித்த பிண்டம் இன்றி பிதிர்ப் பிண்டம் மூன்று இட்டுச செய்ய வேண்டும்.

சபிண்டீகரண பார்வண விதானம், ஏகோதிட்ட விதானம் என இரு வகைப்படும். பார்வண விதானம் பிதிர்தேவர் மூவரைக் குறித்துச் செய்யப்டுவது. ஏகோதிட்ட விதானம் குறித்த பிதிர், தேவர் ஒருவரைக் குறித்துச் செய்யப்படுவது.

தந்தை தாய், தந்தையின் சகோதரன், அவன் மனைவி, பேரன், பேத்தி, ஆகியோருக்குச் செய்யும் சபிண்டி பார்வண விதானமாய் அமையும் மனைவி, கணவன், சகோதரன், மகன், மகள், மாமன், மாமி ஆகியோருக்குச் செய்யும் சபிண்டி ஏகோதிட்ட விதானமாய் அமையும். தந்தை தாயாருக்குச் சபிண்டி செய்யும்போது பேரன், பேத்தி, உயிருடன் இருந்தால் ஏகோதிட்ட விதானமாகச்செய்ய வேண்டும்.

வீட்டுக்கிரியையைப் பொதுவாகச் சபிண்டீகரணம் என்று சொல்லும் வழக்கு இப்போது உண்டு. ஏகோதிட்டம், பதினைந்து மாசிகம், சோதகும்ப சிரார்த்தம் என்பவற்றைச் செய்த பின்பே சபிண்டீகரணம் செய்யவேண்டும். இது ஒரு வருட முடிவில் செய்யத்தக்கது. எனினும் இடையில் ஏற்படும் வசதியீனங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி ஆசௌச நீங்கிய மறுதினத்திற் செய்யலாம். இதிலே நாலு பகுதிகளுண்டு.

1. சிவனடியார் பொருட்டு இருவர் - நந்தி தேவர், மகாகாளர் (விசுவதேவர்)

2.பிதிர்த்தேவர் பொருட்டு மூவர் - கந்தர், சண்டர் காணாதீசர்
3. அதிதி அப்பியாகதர் இருவர் - முன் அறியப்படாதவர் அப்போது அங்கு வந்தவர்
4. நிமித்தர் - இறந்தவர் பொருட்டு ஒருவர்

இவ்வாறு எண்மர் அமர்த்தப்படுவர். எண்மர் கிடைக்காத போது ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவராக நால்வரையேனும், விசுவதேவருக்கு ஒருவர் பிதிர்த் தேவருக்கு ஒருவராக இருவரை யேனும் அமர்த்தலாம். ஒருவரை அமையும் போது புயங்களில் விசுவதேவரையும் தோளுச்சியிற் பிதிர்த் தேவர்களையும் பூசிக்கலாம்.

இவர்களைச் சகல உபசாரங்களும் செய்து, வீட்டினுள் அழைத்து வந்து, தர்ப்பை ஆசனத்தில் விசுவதேவர். அதிதி அப்பியாகதரைக் கிழக்கு முகமாகவும், பிதிர்த் தேவர்களை வடக்கு முகமாகவும், நிமித்தரை மேற்கு முகமாகவும் அமர்த்துக. அவர்கள் முன் பாத்திரங்களை வைத்து, தேவ பாத்திரத்தில் நெல்லும், பிதிர்ப் பாத்திரத்தில் எள்ளும் இட்டு, பூசிக்கவும். பூணூலை வலமாக இட்டு விசுவதேவரையும், இடமாக இட்டுப் பிதிர்த்தேவரையும் பூசிக்க வேண்டும். நிமித்தரையும், பின் அதிதி அப்பியாகதரையும் பூசித்து வஸ்திரம், அரிசி, காய்கறி தானம், தட்சணை கொடுக்கவும். அவர்கள் முன்னிலையிற் சாணத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெழுகி, வாழையிலையில் தெற்கு நுனியாகத் தர்ப்பைகளை வைத்து எள்ளுச் சிதறிக் கர்த்தா, தெற்கு நோக்கி இடது முழந்தாள், இடது கையை ஊன்றியிருந்து, வடக்கிலிருந்து தெற்காக முதல் வரிசையில் பிதிர்வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், இரண்டாவது வரிசையில் மாதுரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், கிழக்கில் மூன்றாவது வரிசையில் நடுவில் இறந்தவர் (நிமித்தம்) குறித்து ஒரு பிண்டமும் இடுக. நிமித்த பிண்டம் சற்று நீண்டதாய், நுனி வளைந்து மற்றப் பிண்டங்களைத் தீண்டுவதாய் அமையும்.

பிண்டத்திற்கு மஞ்சள், சந்தனம், பூவும் சாத்தவும். இறந்தவர் ஆணாகில் வேட்டியும், பெண்ணாகில் சேலையும் பிண்டத்திற்குச் சாத்துக. பிண்டத்திற்கு மேற்கே அன்னம், கறிவகை, தயிர் பாயசம், பலகாரம், பழவகை, வெற்றிலை, பாக்கு, என்பவற்றைப் படைக்கவும். இளநீரை, வெட்டித் திறந்து வைக்கவும் . பின்னர் தூபதீபம் காட்டி வழிபாடு செய்யவும். கர்த்தாவும் உறவினரும் பூவும் நீருமிட்டு வழிபட்ட பின் திருமுறை பாடி. சரமகவி பாடித் தர்ப்பணம் செய்யவும். நிமித்த பிண்டத்தில் சாத்திய பூவை எடுத்துப் பிதிர்ப் பிண்டத்திற் சேர்க்கவும். இதனால் இறந்தவர் பிதிர்களுடன் சேர்ந்தார். எனக் கொள்ளப்படும். பின்னர் சகல பிதிர் தேவர்களையும் உத்வாசனம் செய்து, பிண்டங்களைப் பசுவிற்குக் கொடுக்கவும். அல்லது. சமுத்திரத்தில் விடவும்.

வடக்குத் தெற்காக மூன்று பாத்திரமும், கிழக்கில் ஒரு பாத்திரமும் வைத்து, அவற்றுள் அர்க்கியம் (நீர், சந்தனம், பால், எள்ளு, தர்ப்பை நுனி, பூ) இட்டு மூன்று பாத்திரத்துள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதிர்த்தேவரையும், தனிப்பாத்திரத்தில் நிமித்தரையும் பூசித்து நிமித்தருக்குரிய பாத்திரத்தில் உள்ள அர்க்கிய சலத்தை பிதிர் தேவருக்குரிய மூன்று பாத்திரத்தில் உள்ள சலத்துடன் சேர்க்கும் நிகழ்வு அர்க்கிய சம்யோசனம் எனப்படும்.

பின்னர் குருவிற்குத் தட்சணை கொடுத்து, ஆசீவாதம் பெற்ற பின், குரு, கர்த்தாவிற்கு மஞ்சளால் திலகமிட்டு அதன்மேல் அட்சதையை வைத்து விடுவார். குருவை வீட்டு வாசல் வரை சென்று வழியனுப்பி, உறவினர், நண்பருடன்
உணவு உண்ணவும்.

## ஆப்திகம் ( ஆட்டைத்வசம்)

ஓர் ஆண்டு முடிவிற் செய்யப்படும் சிரார்த்தமாதலால் இது ஆட்டைத் திவசம் எனப்படும். இறந்த திதியிற் செய்யும் இந்த சிரார்த்தத்துடன் இறந்தவரைக் குறித்துச் செய்யும் அபரக்கிரியைகள் நிறைவுறும். முக்கியமாக கவனிக்க வேண்டியது இறந்த திதி பட்சம்.

## வருட சிரார்த்தம்

சிரார்த்தமென்பது சிரத்தையுடன் செய்யப்படுவது எனப் பொருள் கொள்ளப்படும். வருடந்தோறும் இறந்த திதியில் தந்தை தாயாரைக் குறித்துச் செய்யப்டுவது சிரார்த்தமாகும். மகன் தந்தைக்குச் செய்யும் சிரார்த்தத்தில் தந்தை, பேரன், பூட்டன் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும், தமது வம்சத்தில் உள்ள பிதிர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டமும் இடல் வேண்டும். தாயாருக்குச் சிரார்த்தம் செய்யும்போது தாய் தகப்பனின் தாய் பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கு மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிண்டமும் தமது வம்சத்தவருக்கு ஒரு பிண்டமும் இடல் வேண்டும்.

சிரார்த்தம் அன்ன சிரார்த்தம், ஆமசிரார்த்தம், இரணிய சிரார்த்தம், தருப்பண ரூப சிரார்த்தம் என நான்கு வகைப்படும். சிரார்த்தம் செய்ய மறந்தாலோ அல்லது திதி தெரியாமல் இருந்தால் அம்மாதத்தில் வரும் அமாவாசையில் தர்ப்பணம் செய்யலாம். அல்லது புரட்டாதி மாதத்தில் வரும் மாளய பட்சத்தில் செய்யலாம். சிரார்த்தம் செய்ய முடியாவிடில் ஆலயம் சென்று மோட்ச அர்ச்சனை செய்து வழிபடலாம். படையலுக்குச் சர்க்கரைச் சாதம், பழங்கள், சோறு கறி, காய்ச்சிய பால், பலகாரம், வைக்க வேண்டும்.

### அன்ன சிரார்த்தம்

தம் மரபிலோ அன்றித் தம்மில் உயர்ந்த மரபிலோ உள்ள தீட்சை பெற்றவரை அழைத்து நிமித்த தானத்திலிருத்தி, குறித்த தானத்திற்கு உரியவராகப் பூசித்து, அமுது படைத்து, உண்பித்துச் செய்யும் சிரார்த்தமாகும். இதில் அன்னம், எள், பானீயம் (நீர்) தயிர், பால், தேன்,நெய், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்துப் பிண்டமிடல் வேண்டும்.

### ஆம சிரார்த்தம்

உணவிற்குப் பதிலாக அரிசி, காய்கறி வகைகளைப் படைத்துச் செய்யும் சிரார்த்தமாகும். இதில் அரிசிமா, உழுந்துமா, எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்து உருட்டிப் பிண்டமிடல் வேண்டும். இவ் வெட்டுப் பொருட்களும் அட்டாங்க மெனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரணிய சிரார்த்தம்**

அன்ன சிரார்த்தம், ஆம சிரார்த்தம் செய்ய வசதியில்லாத போதும் தகுதியானவர் கிடைக்காத போதும் பணத்தை வைத்துச் செய்யப்படுவது இரணிய சிரார்த்தமாகும்.

**தருப்பணரூப சிரார்த்தம்**

இது அமாவாசையிற் செய்யப்படுவதாகும். அன்ன சிரார்த்ததில் அன்னபிண்டமும். ஆமசிரார்த்தத்தில் ஆமபிண்டமும் இடல் வேண்டும். அன்ன சிரார்த்தத்தில் ஆம பிண்டமும், ஆம சிரார்த்தத்தில் அன்ன பிண்டமும் இடுதல் குற்றமாகும்.

அன்னசிரார்த்தம் அபராணதிற் செய்தல் வேண்டும். ஆம சிரார்த்தம் சங்கவகாலத்திற் செய்து, போசனம் அபராணத்திலும் செய்தல் வேண்டும்..

| | | |
|---|---|---|
| பிராதக் காலம் | - | சூரிய உதயம் முதல் ஆறுநாழிகை வரை |
| சங்கவ காலம் | - | அதன்மேல் பன்னிரண்டு நாழிகை வரை |
| மத்தியானம் | - | அதன்மேல் பதினெட்டு நாழிகை வரை |
| அபராணம் | - | அதன்மேல்இருபத்திநாலு நாழிகை வரை |
| சாயான்னம் | - | அதன்மேல் முப்பது நாழிகை வரை |

சூரிய உதயம் காலை ஆறு மணியாயின்

| | | |
|---|---|---|
| பிராதக்காலம் | - | காலை 6.00 - 8.24 வரை |
| சங்கவ காலம் | - | அதன்மேல் - 10.48 வரை |
| மத்தியானம் | - | அதன்மேல் பகல் 1.12 வரை |
| அபாரணம் | - | அதன்மேல் மாலை 3.36 வரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயன்னம் - அதன்மேல் மாலை 6.00 வரை

சிவபெருமான் - அபிஷேகத்தாலும், விஷ்ணு அலங்காரத்தாலும், பிதிர்கள் தர்ப்பணத்தாலும் மகிழ்வர்.

சிரார்த்த வகைகள்

நித்திய சிராரத்தம் - நாள்தோறும் பிதிரைக் குறித்துச் செய்யப்படும் தர்ப்பணம்

நைமித்திய சிரார்த்தம் - தந்தை, தாயார் இறந்த மாதம், திதியில் வருடம் தோறும் விதிப்படி செய்வது

காமிய சிரார்த்தம் - அமாவாசை, சூரியகிரணம், சந்திர கிரணம், விதிபாதயோகம், உத்த ராயணம், சித்திரை விஷீ மாதப் பிறப்பு, வைகாசி வளர் பிறைத் திருதியை, கார்த்திகை வளர்பிறை நவமி, புரட்டாதி தேய்பிறைத் திரயோதசி, மாசி அமாவாசை ஆகிய தினங்களிற் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, பிதிர்தர்ப் பணம் செய்து அதிதிகள் சுற்றத்தாரோடு போசனம் செய்வ தும். இது தீர்த்த சிரார்த்த மெனப் படும்.

விருத்தி சிரார்த்தம் இது நாந்தி சிரார்த்தம் என்றும் கூறப்படும். சீமந்தம், சாதக கர்மம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமகரணம், அன்னப் பிராசனம், விரதம், விவாகம், கிருகப்பிரவேசம் போன்ற சுப கருமங்களில், பிதிர் தேவர்களைக் குறித்துச் செய்யும் சிரார்த்தம் விருத்திச் சிரார்த்தமாகும். பிதிர்களின் ஆசீர்வாதம் பெறும் பொருட்டுச் செய்யும் இச் சிரார்த்தம் மங்கள சிரார்த்தம் எனவும் கூறுவர்.

காயா சிரார்த்தம்: காயாவில் செய்து பிண்ட மிட்டு பிதிர்களைத் திருப்திப் படுத்துவதால் ஏழு கோத்திரத்தில் உள்ள நூற்றியொரு குலமும் விருத்தியாகும். ( பிதாவின் குலம் இருபது, மனைவி குலம் பதினாறு, சகோதரி குலம் பன்னிரண்டு, மகன் குலம் பதினொன்று, பிதாவின் சகோதரி குலம் பத்து, மாதாவின் சகோதரி குலம் எட்டு. ஆகக் குலம் நூற்றொன்று).

காசி, காஞ்சி, மாயை, மதுரை, அவந்தி, அயோத்தி, துவாரகை ஆகிய முத்தித்தலம் ஏழிலும் ஏனைய புண்ணியதலங்களிலும் சிரார்த்தம் செய்வது மிகுந்த புண்ணியமாகும்.

ஆசௌச காலத்தில் சிரார்த்தம் வரின்

சனன மரண ஆசௌசத்திற் சிரார்த்த தினம் வந்தால் ஆசௌசம் நீங்கும் நாளில் சிரார்த்தம் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவை தான் வீட்டுக்கு விலக்காயிருக்கும்போது தன் கணவனுடைய சிரார்த்தம் வந்தால், ஐந்தாம் நாள் சிரார்த்தம் செய்யக் கடவுள். சிரார்த்தத்திற்குப் பாகம் பண்ணத் தொடங்கிய பின், ஆசௌசம் வந்தால் அது கர்த்தாவைப் பற்றாது.

## சிரார்த்தத்திற்கு ஆகுந்திரவியங்கள்

நெல்லரிசி, கோதுமை, யவம் (நெல்) சிறு பயறு, உழுந்து, எள்ளு, சர்க்கரை, வெல்லம், தேன், நல்லெண்ணெய், பசுப்பால், பசுத்தயிர், பசு நெய், சிகைக்காய், மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, உப்பு, புளி, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம், தேங்காய், இளநீர், பாகற்காய், முள்ளிக்காய், கெக்கரிக்காய், வெள்ளரிக்காய், புடலங்காய், அவரைக்காய், நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், சிறுகிழங்கு, பெருவள்ளிக்கிழங்கு, இஞ்சிக் கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டையிலை, சேப்பந்தண்டு, சேப்பங்கீரை, சேப்பங்கிழங்கு, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, ( மிளகாய், கத்தரிக்காய், பூசணிக்காய், பயிற்றங்காய், கொடுக்கலாமென சில நூல்கள் கூறுகின்றன.)

## சிரார்த்தத்திற்கு ஆகாத திரவியங்கள்

கடலை, துவரை, வெண்கடுகு, பெரும் பயிற்றங்காய், பிர்க்கங்காய், அத்திக்காய், முருக்கங்காய், பூசணிக்காய், கத்தரிக்காய், சுரக்காய், வாழைப்பூ, முள்ளங்கி, வெங்காயம், வெள்ளைப்பூடு, எருமைப்பால், எருமைத்தயிர், எருமைநெய், ஆட்டுப்பால், ஆட்டுத்தயிர், ஆட்டு நெய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிரார்த்தத்திற்கு ஆகும் பத்திர புக்ஷ்பம்

வில்வம், துளசி, அறுகு, சம்பகப்பூ, தாமரைப்பூ, புன்னகைப்பூ, முல்லைப்பூ, நந்தியாவட்டைப்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர், எட்டிப் பூ.

### ஆகாத புஷ்பம்

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ, கர்த்தாவும் சிரார்த்தத்தின் பொருட்டு வரிக்கப்பட்டவரும் சிரார்த்த தினத்திலும் முதற்றினத்திலும் மறுதினத்திலும் சவரம் செய்து கொள்ளுதல், மீண்டும் புசித்தல், வழி நடத்தல், பாரஞ்சுமத்தல், கோபம், பொய், காமம், இவைகள், தவிர்த்து விரத நியமமுடையவராய் இருத்தல் வேண்டும். விரத நியமம் தப்பிப் புணர்ச்சி முதலியவற்றைச் செய்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர். கர்த்தா இம் மூன்று தினத்திலும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளலும், பரான்னம், புசித்தலும், வெற்றிலை பாக்குஉண்ணலும், மருந்து உண்ணலும் ஆகாவாம். சிரார்த்த தினத்தில் வீட்டிலே தயிர் கடைதலும் நெற்குற்றுதலும், பிச்சை போடுதலும், எண்ணெய், நெல் முதலிய பொருட்களைக் கொடுத்தல், வாங்குதலும் ஆகாவாம்.

சிரார்த்த தினத்திலே, திருக்கோவிலிலே, கடவுளுக்குத் தன்னால் இயன்றமட்டும் அபிஷேகம், பூஜை, திருவிளக்கேற்றுதல் முதலியன செய்தல் வேண்டும். பசுவிற்குப் புல்லுப் போடல் வேண்டும்.

சிரார்த்தம் நடக்கும்போது வேதத்தையும் திருமுறைகளை யும் புராண இதிகாசங்களையும் தரும சாத்திரத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரார்த்தம் வாங்குவோருக்குக் கேட்கும்படி படிப்பித்தல் வேண்டும். இது பிதிர்களுக்கு மிகப்பிரியமாகும்.

சிரார்த்தத்திலே கண்ணீர்விடுதலும், கோபித்தலும், பொய்சொல்லுதலும், துரிதஞ் செய்தலும், சிந்திய அன்னத்தைக் காலாலே மிதித்தலும், இலையிலே அன்னத்தைத் தூவிப் பரிமாறலும் ஆகாவாம். சிரார்த்த மேற்பவர் நன்று. தீது என்று பேசாது திருப்பதியோடு ஏற்றல் வேண்டும்.

சிரார்த்தத்திற்குப் பொருள் இல்லாதவன் காய், கனி, கிழங்கு, எள் இவையேனும் சற்பிராமணருக்குக் கொடுத்து நமஸ்காரம் செய்து, திலதர்ப்பணம் பண்ணிக் (திலம் -எள்ளு) கொண்டு தான் திருப்பதியாகப் போசனம் பண்ணல் வேண்டும்.

**மாளயம்**

மாளயம் என்பது பிதிர் கர்மமாகும். இது மஹாளயம் என்று பெயர் பெறும். இது ஒரு பொது சிரார்த்த (திவசம்) மாகும்

புரட்டாதி மாத அபரபக்கப் பிரதமை முதல் அமவாசை வரையுள்ள காலம் மாளய பட்சமாகும். பிதிர்களைத் திருப்திப்படுத்தவும் அவர்கள் நற்கதியடையவும். பிதிர்க் கருமங்கள் செய்ய வேண்டும். இல்லறத் தானுக்குரிய கருமங்களிற் பிதிர்க் கடனும் ஒன்று. ஐவேள்விகளில் பிதிர்யக்ஞமும் ( பிதிர் வேள்வி) ஒன்று.

தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்க நானென்றாங்
கைப்புலத்தா றொம்ப றலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது திருக்குறள். பிதிர்களின் உறைவிடம் தென்திசை. ஆதலால் தென்புலத்தார் என்று பெயர் பெறுவர்.

சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் தெட்சணாயன காலத்தின் நடுப்பகுதி புரட்டாதி மாதமாகும். இக்காலம் சூரியன் பூமிக்கு நேரே நிற்கும் காலம். சந்திரனும் ( அபரபக்கத்தில்) தென் பாகத்திற் பொருந்தியிருக்கிறது.
இக்காலம் பிதிர் கருமங்களுக்குக் கேற்றதாகக் கொள்ளப்படும்

ஒருவர் இறந்த தினத்திற் சிரார்த்தம் ( திவசம் ) செய்தல் வேண்டும். இறந்த தினம் தெரியாவிட்டால் அந்த மாதத்தில் அமாவாசை அன்று செய்தல் வேண்டும். அல்லது மாளய பட்சத்திற் செய்து கொள்ளலாம். தெரிந்தோ தெரியாமலோ சிரார்த்தத்தைச் செய்யாது விட்டவர்கள் , மாளய பட்சத்திற் பிதிர்க் கருமம் செய்தல் வேண்டும்.

இந்தப் பட்சம் முழுவதும் பிதிர்க் கருமம் செய்தால் வருடம் முழுவதும் செய்த பலன் கிடைக்கும். பிரதமையில் தனசம்பத்தும் துவிதியையில் பிரஜாலாபமும், திருதியையில் வளர்ச்சி லாபமும், சதுர்த்தசியில் சத்துரநாசமும், பஞ்சமியிற் சம்பத்தும், சஷ்டியிற் புகழும், சப்தமியில் கணாதி பத்தியமும், அட்டமியிற் சிறந்த புத்தியும், நவமியில் ஸ்திரீசம்பத்தும், தசமியில் இஷ்ட சித்தியும், ஏகாதசியில் வேதசித்தியும், துவாதசியில் பிரஜாவிருத்தியும், தியோதசியிற் பசு விருத்தியும், சதுர்த்தியிற் புஷ்டியும் அமாவாசையில் தீர்க்க ஆயுளும். கிடைக்கும் யந்திரங்களால் இறப்போருக்குச் சதுர்த்தசியிற் பிதிர்க்கருமம் செய்வது சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பட்சத்தில் வரும் பரணி அட்டமி, கஜச்சாயை எனப்படும். கஜச்சாயை எனப்படுவது புரட்டாதி மாத்தில் எந்த வாரத்திலாவது மக நட்சத்திரமும் திரயோதசித் திதியும் கூடி வருவது இது ஒரு புண்ணிய காலமாகும். இக் காலத்திற் செய்யும் கருமத்திற்கும் பலன் அதிகம்.

பிதிர்க் கருமங்கள் ஆற்றச் சிறந்த தலங்களாக அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, என்பன அமைந்துள்ளன. காயாவிற் செய்யப்படும். சிரார்த்தம் மிகவும் விசேடமானதாகும். திரயோதசியிற் செய்யும் சிரார்த்தம் காயா சிரார்த்தத்தையொக்கும்.

நாம் அனுப்பும் தபாற் காசுக்கட்டளை போன்றவற்றை, தபாற் கந்தோரில் இருப்பவர்கள் உரியவர்களிடம் கொண்டு சென்று கொடுப்பார். இது போலப் பிதிர்க் கருமத்திற் செய்யப்படும் தர்ப்பணம். தானம் முதலியவற்றின் பலன்களை உரியவர்கள் இருப்பிடம் அறிந்து அவர்களிடம் சேர்ப்பிப்பர். பிதிர்த் தேவதைகள் ஸ்கந்தர், சண்டர், காணதீதர் என்போர் பிதிர்த் தேவதைகளாவர். சமய விசேட நிர்வாண தீட்சிதருக்குச் சாந்தர், சதாசிவர், ஈசர் என்போர் பிதிர்தேவதைகளாகும். பிதாவின் உயிர் ஸ்கந்த பதத்தில் ஸ்கந்த சொரூபமாகும், பாட்டனுடைய உயிர் சண்டபத்தில் சண்டசொரூபமாகவும், முப்பாட்டனுடைய உயிர் கணாதீதபதத்திற் கணாதீத சொரூப மாகவும் இருக்கும். இக்காலத்தில் விரதமிருந்து பிதிர்த்தர்ப் பணம், தானதர்மம், சாதுக்கள், அடியவர்கள், ஏழைகள், ஆகியோருக்கு அமுதமளித்தல் போன்றன செய்தல் வேண்டும். அபரக் கிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் இடப்புறமாகவும் பாதத்திலிருந்து சிரசுவரை பரியந்தமாகவும் செய்ய வேண்டும். கர்த்தா தெற்கு நோக்கியே கிரியைகள் இறந்தவர்களுக்குக் காட்டும் தூபம், தீபம் செய்ய வேண்டும். யாவும் இடப்புறமாகச் செய்ய வேண்டும். தலைவாழையிலையின் நுனி தெற்கே பார்க்க வேண்டும். அபரக்கிரியைகளின்போது தோரணங்கள் கட்டப்படும் முறைகள்

## மரண வீட்டில் அபரக் கிரியைகளைச் செய்வதற்கு வேண்டிய பொருட்களின் விபரம்.

இந் நாளிற் கிரியை செய்யும்போது சைவக் குருக்களே இவற்றைக் கொண்டு வருவார்.

| | |
|---|---|
| நெல்லு | வீபூதி |
| பச்சைஅரிசி | சந்தனம் |
| பயறு | குங்குமம் |
| உழுந்து | அபிஷேகக்கூட்டு |
| எள்ளு | மஞ்சள் மா |
| தேங்காய் | அரிசிமா |
| தேங்காயெண்ணெய் | அபிஷேகத் திரவியம் |
| பன்னீர் | குடம் 1 |
| நெய் | குத்துவிளக்கு |
| தேன் | உரல், உலக்கை |
| நல்லெண்ணெய் | அறுகம்புல்லு |
| அரப்பு | மாவிலை, வாழையிலை |
| லவரந்தர் | கோசலம், கோமயம் |
| அத்தர் | பால், இளநீர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஊதுபத்தி | மான் தோல் |
| சாம்பிராணி | தட்டம் |
| தசாங்கம் | வேட்டி, சால்வை, (கிரியை செய்வோருக்கு) |
| நெற்பொரி | |
| நவதானியம் | வாழைப்பழம் |
| கழிநூற் பந்து | எலுமிச்சம்பழம் |
| பஞ்சவர்ண நூல் | பழ வகைகள் |
| விளைவு சூடம் | பாக்கு |
| சமித்துக்கட்டு | வெற்றிலை |
| பட்டுத்துண்டு | ( இறந்தவருக்கு வேட்டி சால்லை அல்லது சேலை) |
| குருக்கள் வேட்டி, | |
| சால்வை | சட்டை |
| கும்ப வேட்டி 1 | கத்தி, தோரணம், கயிறு |
| முட்டி 2 | தீப்பெட்டி |
| சட்டி 2 | 6அ வெள்ளைத்துணி (புதியது) |
| செம்பு 13 | |

இப் பொருட்களைக் கிரியை செய்யும் குருக்களும் கொண்டு வருவார். அவரிடம் ஆலோசித்துச் செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்தியேஷ்டிக் கிரியைகளுக்குத் தேவைப்படும் பொருட்கள்.**

| | |
|---|---|
| நெல்லு | எடுப்பது |
| பச்சை அரிசி | 2 தானத்திற்கு அரிசி, மரக்கறி. |
| பயறு | செங்கல் -1 |
| உழுந்து | வைக்கோல் 1 கட்டு |
| எள்ளு | கத்தி |
| தேங்காய் 20 | தீப்பெட்டி |
| கழிநூல் பந்து | வெற்றிலை பாக்கு |
| பஞ்சவர்ண நூல் | வாழைப்பழம் |
| விபூதி | எலுமிச்சம்பழம் |
| குங்குமம் | பழவகைகள் |
| சந்தனம் | அறுகம்புல்லு |
| பன்னீர் | பால், தயிர். |
| அபிஷேகத் திரவியம் | இளநீர் |
| நவதானியம் | வாழையிலை |
| நெற்பொரி | மாவிலை |
| நெய் | முட்டி 2 |
| சமித்துக்கட்டு | சட்டி 1 |
| ஊதுபத்தி | உரல், உலக்கை |
| விளைவு சூடம் | தேங்காய்யெண்ணெய் |
| சாம்பிராணி | சில்லறைப்பணம் |
| அரிசிமா | செம்பு 12 |
| மஞ்சள் மா | குடம் 1 |
| நல்லெண்ணெய் | குத்துவிளக்கு |
| அரப்பு | தட்டம் |
| குருக்கள் வேட்டி, சால்வை | மான்தோல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கும்ப வேட்டி | பூ மாலை, சரப்பந்து |
| வேட்டி | அமுது |
| பட்டுத்துண்டு | பலகார வகைகள் |
| சிவப்பு பச்சை | 1படி பச்சை அரிசி பொங்கல் |
| பச்சை மா (புல்லாந்தி | 3 படி அரிசியிற் சோறு |
| இலையை உலர்த்தி இடித்து | கறிவகை |
| எடுப்பது) | தென்னோலைத் தோரணம் |
| சிவப்புமா ( செங்கல் தூள்) | கயிறு |
| கரிமா ( கரியில் இடித்து) | 1m வெள்ளைத் துணி (புதியது) |

## வருட சிரார்த்தத்திற்குத் தேவைப்படும் பொருட்கள்

மாவிலை
அறுகம்புல்
பூக்கள்
வாழைப்பழம்
எலுமிச்சம்பழம்
சக்கரை சிறியது
இஞ்சி 1 துண்டு
கறுப்பு எள்
நல்லெண்ணெய்1 போத்தல்
தலை வாழையிலை 5
நெய்
தேன்
கற்பூரம்
ஊதுபத்தி
இளநீர்
பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிர்

தேங்காய் 3

பச்சை அரிசிமா

சிறிது உளுத்தம் மா, மஞ்சட் தூள்

ஐயருக்கு வேட்டி சால்வை

தானத்திற்கு அரிசி, மரக்கறி, உப்பு, புளி பருப்பு, மிளகாய்த்தூள்

அரப்பு

சாம்பிராணி

வீபூதி

சந்தனம்

குங்குமம்

நூற்பந்து

வாசலில் நிறைகுடம் குத்துவிளக்கு வைக்க வேண்டும். தர்ப்பணம் செய்யுமிடத்தில் படம் வைத்து மாலை அணிவித்து ஒரு குத்துவிளக்கு ஏற்றி வைக்கவும். கும்பம் வைக்க ஒரு செம்பு, பச்சை அரிசி, கம்பமாலை பிண்டத்திற்கு ஒரு மாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகத்தி :

அகத்தி இலைச்சாறு ஒரு கரண்டி காலை வெறும் வயிற்றில் குடிக்க வயிற்றுப்புழுக்கள் ஒழியும். இலையைச் சமைத்துச் சாப்பிட்டால் தாய்ப்பால் சுரப்பு கூடும். மலச்சிக்கல் தீரும். பல் மற்றும் எலும்பு வளர்ச்சிக்கு ஏதுவாகும். உடல் சூட்டைத் தணிக்கும். குடல் புண் குணமாகும்.

### அந்தி மந்தாரை :

இலைகளை அரைத்து காயத்தில் பூசினால் காயங்கள் ஆறும். இலைச்சாற்றை எடுத்து சொறி, சிரங்கு மேல் தடவ குணமாகும்.

### அம்மான் பச்சரிசி :

இலைகளை அரைத்து பாலில் குடித்தாலோ அல்லது தினசரி வெறும் வயிற்றில் தின்றாலோ விந்து பெருகும். மேகச்சூடு தணியும். அம்மான் பச்சரிசிப்பாலை உடலில் தோன்றும். பால்உண்ணி, கால்ஆணி மேல் போட்டு வந்தால் அவை நாளடைவில் மறையும்.

### அரசு :

இலைக் கொழுந்தை அரைத்து தயிரில் கலந்து காலை வேளை சாப்பிட சீதபேதி குணமாகும். துளிர் இலைகளை பாலில் போட்டு காய்ச்சி வடிகட்டி சர்க்கரை சேர்த்து காலையில் அருந்த உடல் குளிர்ச்சி பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தி :

துளிர் இலைகளைள அரைத்து உருட்டிக் காய வைத்து அரை லீட்டர் நல்லெண்ணெயில் காய்ச்சி வாரம் இருமுறை தலைக்குத் தேய்க்க நல்ல தூக்கம் வரும். தலைவலி மறையும். இலைகளை உலர வைத்து பொடியாக்கி தேனில் குழைத்து உண்ண பித்தம் நீங்கும்.

## அவுரி :

இலைகளை விளக்கெண்ணை விட்டு வதக்கி இளஞ்சூடாக மூட்டு வலி மேல் ஒத்தடம் கொடுக்க வலி தீரும்.

## அரைக்கீரை :

அடிக்கடி இதை உணவில் சேர்த்துவர கபரோகம் வாதநோய் நீங்கும். தாது விருத்தியடையும். சளி, இருமல் குணமாகும் உடலுக்கு பலத்தை கொடுக்கும்.

## ஆல் :

இலைத்துளிர்களை அரைத்து தயிரில் கலந்து அருந்த ரத்த பேதி குணமாகும். இள இலைகளை வதக்கி கட்டிகள் மேல் கட்டி வர கட்டிகள் உடையும்.

## ஆடு தீண்டாப்பாலை :

இலைகளைப் பிழிந்து கரப்பான் புண்மேல் பூசிவர கரப்பான் புண் மறையும். கைப்பிடி இலைகளோடு இதே அளவு மாவிலைத்துளிர் எடுத்துக் காய வைத்து இடித்து வயிற்றுப்போக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட நேரம் ஒரு கரண்டி தூளை எடுத்து தேனில் குழைத்து உண்ண வயிற்றுப் போக்கு நிற்கும்.

## ஆடாதோடை :

ஒரு கரண்டி இலைச் சாற்றுடன் அரைக்கரண்டி தேன், அரைக்கரண்டி இஞ்சிச்சாறு சேர்த்து அருந்தி வர இருமல், ஆஸ்த்மா, குணமாகும். ஒரு கரண்டி இலைச்சாறு அருந்த வயிற்றுப் போக்கு குணமாகும். இலைகளை சுருட்டிப் புகைக்க ஆஸ்தமா குணமாகும். இலைகளைக் பிழிந்து சாறு எடுத்து சாற்றை வீட்டில் தெளிக்க ஈ, கொசு, பூச்சிகள் ஓடி விடும். இலைச்சாற்றை கை கால்களில் பூசிட கொசுக்கள் அருகில் வராது. இலைகளை அரைத்து மூட்டு வலி மேல் பூச மூட்டுவலி குணமாகும்.

## இஞ்சி :

இலைகளைத் துண்டுகளாக்கி நீரிட்டுக் காய்ச்சி நீரைக்குடிக்க வயிற்றுக்கோளாறு, பித்தம் அகலும். இலைகளை உலர வைத்துப் பொடியாக்கி நீரில் கலந்து குடிக்க ஜீரணம் ஏற்படும்.வயிற்று உப்பிசம் மறையும்.

## இலுப்பை :

இலைகளை அரைத்து சொறி, சிரங்கு மேல் பூசக் குணமாகும். இலைகளைப் பெண்கள் மார்பில் வைத்துக் கட்ட பால் சுரக்கும். இலைகளை அரைத்து தேமல் மேல் பூச தேமல் சிறிது சிறிதாக மறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலந்தை :

நான்கு இலைகளோடு மூன்று மிளகு,இரண்டு பூடு சேர்த்து அரைத்து வாயிலிட்டு வெந்நீர் குடிக்க காய்ச்சல் குணமாகும். இலைகளை அவித்து அடி வயிற்றில் கட்டச் சிறு நீர் எளிதில் பிரியும். தளிர் இலைகளை அரைத்து புண்கள் மேல் கட்டிவர புண்கள் ஆறும்.

## இலவு

இலைகளை நீரிலிட்டுக் காய்ச்சி நீரால் முகம் கழுவ காய்ச்சல், தலைவலி நீங்கும். இலைகளை அரைத்து வீக்கங்கள் மேல் பூச வீக்கம் குறையும்.

## உசிலை :

இவ்விலைகளை உலர வைத்துப் பொடியாக்கி உடலில் தேய்த்துக் குளிக்க தோல் நோய்கள் குணமாகும்.

## உருத்திராட்சம் :

இலைச்சாறு வாதம்,கபம்,பித்தம் போன்றவற்றை நீக்கும்.

## ஊமத்தை :

இலைகளை வதக்கிக் கட்டிகளில் கட்டினால் கட்டி குணமாகும். இலைப்பொடியை விளக்கெண்ணெயில் குழைத்து ரணங்கள் மேல் பூசி வர ரணங்கள் ஆறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எலுமிச்சை :**

இலைகளை நீரிலிட்டுக் காய்ச்சி வாய் கொப்பளிக்க தொண்டை வலி நீங்கும். இள இலைகளை மென்று வர வாய் நாற்றம் நீங்கும். இள இலைகளை அரைத்துத் துவையலாக்கிச் சாப்பிட வயிற்றுக் கோளாறுகள் பித்தம் நீங்கும்.

**எருக்கு:**

இலைப்பாலை முள் குத்திய இடத்தில் தடவினால் முள் வெளியே வரும். இலைகளை நெருப்பிலிட்டு வாட்டி சூடாக இவ்விலை மேல் நிற்க சில நாட்களில் குதிக்கால் வலி குணமாகும்.

**ஏழிலைப்பாலை :**

இலையை உலர வைத்துப் பொடியாக்கி வறுத்து சீழ் வடியும் புண்ணில் தூவி வர புண் ஆறும்.

**ஓரிதழ் தாமரை :**

செடியை வேருடன் பிடுங்கி நிழலில் உலர்த்திப் பொடியாக்கி, சர்க்கரை கலந்து காலை மாலை ஒரு கப் பாலில் அரைத் தேக்கரண்டி பொடி கலந்து சாப்பிட்டு வர ஒரு மாதத்தில் தாது விருத்தி ஏற்படும்.உடல் அழகு பெறும்.

**கல்யாண முருங்கை :**

காலை மாலை அரைத்தேக்கரண்டி இலைச்சாறு அருந்த நீர்க்கடுப்பு குணமாகும். இலைச்சாற்றுடன் தேன் கலந்து அருந்த வயிற்றுப் புழுக்கள் ஒழியும்.இள இலைகளைக் சமைத்து உண்ண பால் சுரக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டங்கத்தரி :

இலைச்சாறுடன் தேன் கலந்து சாப்பிட இருமல் தீரும். இலைச்சாறுடன் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சிப் பூச வாத வலி குணமாகும்.

## கருவேப்பிலை :

இலைகளைத் துவையலாக்கி அரைத்துச் சாப்பிட பித்தம், வாந்தி, வாய்வை நீக்கும். இலைகளை அரைத்து மோரில் கலந்து குடிக்க வயிற்றுப்போக்கு நிற்கும். சிறிதளவு கருவேப்பிலை இலைகளோடு கசகசா,கஸ்தூரி மஞ்சள் இலைகளை அரைத்து முகத்தில் பூசி வர அம்மைத் தழும்புகள் மறையும். கருவேப்பிலை இலைகளை தேங்காய் எண்ணெயில் காய்ச்சி ஓரிரு வில்லை கற்பூரத்தை தூளாக்கி எண்ணெயில் போட்டு தினசரி தலைக்குத் தேய்க்க பித்தக் கிறுகிறுப்பு,இளநரை நீங்கும்.

## கீழ்க்காய் நெல்லி :

காமாளை, தாதுவெப்பம், மேகப்புண், நேத்திரரோகம் விலகும். சமூலத்தை அரைத்து பாக்குப் பிரமாணம் பாலில் சாப்பிட சோகை, காமாளை, பித்த ரோகங்கள் குணமாகும். இரத்தம் அதிகரிக்கும். கண்குளிரும்.

## குப்பை மேணி :

வயிற்றுவலி, வாதரோகம், பீனிசம், சூபாதிக்கம், ரத்தமூலம் இவை நீங்கும். சாற்றுடன் உப்புக்கலந்து அரைத்து சொறி, சிரங்கிற்குப் பூச குணமாகும். இலைச்சாற்றை நெற்றிப் பொட்டில் பூசிட தலைவலி நீங்கும். இலைகளை உலர வைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியாக்கி தினசரி சிட்டிகை வீதம் ஒரு வாரம் சாப்பிட நுரையீரல் நோய்கள் குணமாகும். இலைச்சாற்றை தேங்காய் எண்ணெயில் கலந்து மூட்டு வாத வலிமேல் பூசி வர வலி குணமாகும். இலைகளோடு மஞ்சள் தேய்த்து அரைத்து விசக்கடி,புண்கள் மேல் பூசக் குணமாகும். இலைப்பொடியை தேன் அல்லது வெந்நீருடன் குழைத்து சாப்பிட இருமல்,கபம் தீரும்.

## வெற்றிலை

**மருத்துவப் பயன் : –**

**இருமல், சளி :**

✲ இதன் இலை சாற்றை காலை மாலை பருகி வர குணமாகும்

✲ மிளகு, கராம்பு இரண்டையும் வறுத்து தூள் செய்து வெற்றிலையில் வைத்து சாப்பிட குணமாகும்.

**அஜீரணம் :**

✲ வெற்றிலையுடன் மிளகு சிறிதளவு சீரகம் வைத்து மடித்து வாயிலிட்டு நன்றாக மென்று சிறிது வெந்நீர் அருந்த குணமாகும்.

## மொசுமொசுக்கை

**வேறுபெயர்கள் :** இருகுரங்கின்கை, முசுமுசுக்கை

**மருத்துவப் பயன் :**

**தடிமன், சளி, இருமல் :**

✲ இலையை குடிநீர் செய்து குடித்து வர இருமல் குணமடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணவாக:** ※ இலையை சிறிது நெய்விட்டு வதக்கி உப்பு,புளி காரம் சேர்த்து துவையலாக (சம்பலாக) அரைத்து உணவுடன் சேர்த்து சாப்பிட குணமாகும்.

**தொய்வு நோயாளி :** ※ இதன் இலையை ஊற வைத்து புழுங்கல் அரிசியுடன் சேர்த்தரைத்து அடை செய்து சாப்பிட்டு வர நல்ல குணமாகும்.

## கற்பூரவள்ளி

**வேறு பெயர்கள் :** ※ கற்பூரவல்லி, ஏமவல்லி

**மருத்துவப் பயன்:**

**தடிமன், சளி, இருமல்**

※ இதன் இலைச்சாறு ஒரு தேக்கரண்டியும் கற்கண்டும் சேர்த்து குழந்தைகளுக்கு காலை,மாலை கொடுக்க குணமாகும்.

※ இதன் இலை சாறு 1 தேக்கரண்டியும் கலந்து தினமும் 3 தடவை பருகி வர குணமாகும்.

**தலையிடி :** ※ நல்லெண்ணையில் கற்பூரவள்ளி இலைச்சாறு சேர்த்து காய்ச்சி தலையில் வைத்து வர தலையிடி குணமாகும்.

**லசுனாபிதம் :** (Tonsillitis)

※ இதன் இலையை தினம் மூன்று தடவை மென்று தின்ன குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேங்காய்ப்பூ கீரை

**வேறு பெயர்கள் :** சிறுகீரை, பாவுாணபேதி

**மருத்துவப்பயன் :** ※ சிறுநீர் எரிவு, சிறுநீரகக்கல் அதன் மூலம் குடிநீர் செய்து குடித்து வர குணமாகும்.

**உணவாக:** ※ இலைக்கஞ்சியிலும் இதன் இலைகள் பூக்களை சேர்க்கலாம்

## கோரை

**வேறு பெயர்கள் :** முத்தற்காசு

**மருத்துவப்பயன்:**

**காச்சல் :** ※ கோரைக் கிழங்கும், கொத்தமல்லியும் சேர்த்து குடிநீர் செய்து குடித்து வர குண மாகும்.

**கழிச்சல் அல்லது:** ※ வறுத்த வெந்தயத்துடன் கோரைக்

**வயிற்றோட்டத்தில்** கிழங்கும் வயிற்றோட்டத்தில் சேர்த்து குடி நீர் செய்து பருக குணமாகும்.

## முடக்கொத்தான்

**வேறுபெயர்கள் :** முடக்கறுத்தான்

**மருத்துவப் பயன்:**

**நாரிநோ, மூட்டுவாதம் பிடிப்பு**

※ இதன் இலையை குடி நீர் செய்து குடித்து வர குணமாகும்

**உணவாக** ※ முடக்கொத்தான் இலையை வதக்கி உப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளகாயும் சேர்த்து துவையல் செய்யலாம் அல்லது

* கொடிகளை சீரகம் மிளகு சேர்த்து இரசம் வைத்து சாப்பிடலாம்

**மல கட்டு :** * இதன் இலையை உணவு சேர்த்து வர அல்லது இலைக்கஞ்சி செய்து சாப்பிட நீங்கும்.

## அறுகு

**வேறு பெயர்கள்:** மூதண்டம்

**மருத்துவப் பயன் :** நீரிழிவு நோய் (Diabetic Nullities)

* 2 பிடி அறுகம்புல்லை எடுத்து குடிநீர் செய்து தினமும் தினமும் காலை மாலை சாப்பிடுவதற்கு ஒரு மணித்தியாலயம் முன் பருகி வர குணமாகும். அல்லது நுனி புல்லை மென்று சாப்பிட இதே பலன் ஏற்படும்.நோய் அற்றவர்களும் வாரத்தில் இரு தடவை இவ்வாறு செய்வதால் நோய் தடுப்பாக அமையும்

**குடற்புண் :** * இதன் சாறு காலை மாலை உணவுக்கு முன் பருக குணமாகும்

**மூலநோய் :** * புல்லைப் பிடுங்கி அரைத்து பசுப்பாலில் கலக்கி காலையில் வெறு வயிற்றில் சாப்பிட குணமாகும்.

**சிறுநீருடன்** * ஒரு பிடி அறுகம்புல்லை வேருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எரிவுடன் கலத்தல்:** பிடுங்கி கஷாயம் செய்து அதனுடன் பாலும் பனை வெல்லமும் சேர்த்து காலை மாலை பருக குணமாகும்.

**தோல் வியாதி : சிரங்கு** ❋ அறுகம்புல் சாறு தேங்காய் எண்ணெயில் சம அளவு கலந்து காய்ச்சி பூசி வர குணமாகும்.

## குறிஞ்சா

**வேறு பெயர் :** சர்க்கரைக் கொல்லி

**மருத்துவப்பயன் :**

**நீரிழிவு நோய்:** ❋ சிறுகுறிஞ்சா இலைகளை காய வைத்து இடித்து சூரணமாக்கி 2 -4g தூளை நீருடன் ஒரு நாளைக்கு 2 தடவை சாப்பிட குணமாகும்.

❋ தினமும் சிறுகுறிஞ்சா இலைகளை காலை மாலை மென்று தின்ன குணமாகும். சிறுகுறிஞ்சா இலையை உலர்த்தி (நிழலில் அதே அளவு நாவற்கொட்டை-யையும் சேர்த்து இடித்து சூரணமாக்கி காலை மாலை ஒரு கரண்டி வீதம் சுடுநீரில் அருந்த குணமாகும்.

**உணவாக :** ❋ இலைகளை சுண்டி (வறுத்து) சோற்றுடன் சாப்பிடலாம்

**விஷக்கடி :** ❋ வேரை குடிநீர் செய்து குடிக்கக் கொடுக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீழ்க்காய் நெல்லி

**வேறுபெயர்கள் :** கீழ் வாய் நெல்லி

**மருத்துவப் பயன் :**

**காமாலை நோய்:**

- ❊ இதன் சமூலத்தை குடிநீர் செய்து பருகி வர குணமாகும்.
- ❊ கீழ்க்காய் நெல்லி வேரை பச்சையாக எடுத்து அரைத்து பசும்பாலில் கலக்கி குடிக்க குணமாகும்.
- ❊ கீழ்க்காய் நெல்லி சமூலத்தை அரைத்து பசுப்பாலில் கலக்கி குடிக்க வேண்டும்

**சீத கழிச்சல்/ இரத்த கழிச்சல்:**

- ❊ இதன் இலையை எடுத்து குடிநீர் செய்து தினமும் காலை மாலை குடிக்க குணமாகும்.

**எரிவுடன் சிறுநீர் வெளியேறல்**

- ❊ இதன் இலைகளை எடுத்து குடிநீர் செய்து தினமும் காலை மாலை குடிக்க குணமாகும்.

**கணை** (Rickets)

- ❊ இதன் சாறு எடுத்து சம அளவு நெய்யுடன் சேர்த்து கொதிக்க வைத்து அதன் தினமும் ஒரு கரண்டி வீதம் காலை மாலை சாப்பிட குணமாகும்.

## கரிசலாங்கண்ணி

**வேறுபெயர்கள் :** கரிசாலை, கையாந்தகரை, கையான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருத்துவப் பயன் :**

**காமாலை நோய்** ❋ இலையை சிறிது மிளகு சேர்த்து அரைத்து தினமும் காலை, மாலை சுண்டக்காய் அளவு சாப்பிட குணமாகும்.

❋ இலைசாறு 2 தேக்கரண்டி மோரில் அல்லது பசுப்பாலுடன் கலக்கி குடிக்க குணமாகும்

**உணவாக :** ❋ துவரம் பருப்போடு இதன் இலையையும் சேர்த்து சமைத்து சாப்பிடலாம்

❋ இலைக்கஞ்சியிலும் சேர்த்து கொள்ளலாம்

**வட்டக்கடியில் :** ❋ இதன் இலையுடன் உப்பு சேர்த்து அரைத்து பூசவும் குணமாகும்.

**தலை முடி கறுத்து வளர** ❋ இலைசாற்றை நல்லெண்ணெயில் சேர்த்து காய்ச்சி தலைக்கு வைக்க முடி கருமையாக இருக்கும்

## வல்லாரை

**வேறு பெயர்கள்:** யோசினவல்லி

**மருத்துவப்பயன்:**

**ஞாபகசக்தி, இரத்தவிருத்தி, ஏற்படுத்த**

❋ காய்ந்த இலையை சூரணமாக்கி பசும் பாலுடன் சேர்த்து தினமும் காலை மாலை சாப்பிடலாம்

❋ இலையை நீர்விட்டுஅரைத்து பாக்களவு உருட்டி தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணவாக:** ❋ இலையை உப்பு புளிகாரம் செய்து துவையல்(சம்பல்) செய்து உணவுடன் சாப்பிடலாம்

❋ இலைக்கஞ்சி செய்யும் பொழுதும் அதனுடன் சேர்த்தும் செய்யலாம்.

## வண்டு கொல்லி

**வேறு பெயர்கள்:** சீமை அகத்தி

**மருத்துவப்பயன்:**

**வட்டக்கடி:** ❋ இதன் இலையை தேசிப்புளி சாற்றில் அரைத்து பூசி வர குணமாகும்

**செதில் உதிர்தல்:** ❋ இதன் காய்ந்த இலைகளை எடுத்து இடித்து சூரணமாக்கி வெண்ணெய்யுடன் கலந்து அரைத்து செதில் உதிரும் இடங்களில் சில மணி நேரங்கள் தடவி வைத்து கழுவ குணமாகும்.

## தவசி முருங்கை

**வேறு பெயர்கள்:** சன்னியாசி முருங்கை:

**மருத்துவப்பயன்:**

**அயன் சக்தி நிறைந்த உணவு**

❋ இதன்இலைகளை வறையாக அல்லது கறி செய்து உணவுடன் சாப்பிடலாம்

**மூக்கால் நீர் வடிதல்:**

❋ இதன் இலை சாறு தேக்கரண்டி பருக குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றாழை

**வேறு பெயர்கள்:** குமரி,பிள்ளைக்கற்றாளை, சோற்றுக்கற்றாளை

**மருத்துவப்பயன்:**

**அடிபட்ட வீக்கங்களுக்கு**

❊ கற்றாழைச் சோறும். மஞ்சள் மாவும் கலந்து நல்லெண்ணெயில் குழைத்து கட்டி வர மாறும்.

**தேகச் சூட்டிற்கு:** ❊ குமரிக்கற்றாளை இதன் ஒரு மடலைச் சீவி மேற்றோல் கழித்து உள்ளிருக்கும் சோற்றை சிறுதுண்டுகளாக நறுக்கி நீர் விட்டு 4 முறை கழுவி எடுத்து சிறிது கற்கண்டுத் தூளிட்டுச் சாப்பிட நன்மை பயக்கும்.

**மூலநோய் :** ❊ சோற்றுக் கற்றாளையில் நடுவில் உள்ள வெண்மையான பகுதியை எடுத்து சுத்தப்படுத்தி பனை வெல்லம் வாழைப் பழம், கற்கண்டு சமஅளவு சேர்த்து சாப்பிட்டு வர பூரண குணம் அடையும்.

## பிரண்டை

**வேறு பெயர்கள்:** வஜ்ஜிரவல்லி

**மருத்துவப்பயன்**

**மூலநோய்:** ❊ தண்டையும் இலையையும் பசு நெய் விட்டு வறுத்து பின் அரைத்து கொட்டைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்களவு காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர குணமாகும்.

**குடற்புண், வயிற்றுப் பெருமல்**

**அஜீரணம்:** ❊ பிரண்டை தண்டு இலையை நல்லெண்ணெயில் வதக்கி அத்துடன் மிளகு சீரகம் பெருங்காயம் உள்ளி சேர்த்து அரைத்து சாப்பிட குணமாகும்.

**இருமல் சளி:** ❊ தண்டு இலையை உப்பு, புளி, மிளகாய் கூட்டி அரைத்து துவையலாகவும் அல்லது வேக வைத்து பிரண்டையை உப்பிட்ட மோரில் போட்டு உலர்த்தி வற்றலாகவும் உபயோகிக்கலாம்.

## நொச்சி (கருநொச்சி)

**வேறு பெயர்கள்:** நிர்குண்டி

**மருத்துவப்பயன்:**

**மூட்டு நோய்களில் ................ வாத ரோகம்**

**உட்பிரயோகம்** ❊ நொச்சியையும் வாதநாரயணன் இலை, முடக்கொத்தான் இலையையும் சம அள - வில் எடுத்து நிழலில் உலர்த்தி இடித்து தினமும் காலை மாலை ஒரு தேக்கரண்டி வெந்நீருடன் சாப்பிட குணமாகும்.

**வெளிப்பிரயோகம்:** ❊ இதன் இலையை பொட்டளி கட்டி சூடாக்கி ஒத்தடம் கொடுக்கவும் குணமாகும்.

**மூக்கடைப்பு, பினிசம்:** ❊ இதன் இலை சாற்றை நல்லெண்ணைய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் சேர்த்து காய்ச்சி தலைக்கு வைத்து வர குணமாகும்.

**காய்ச்சல் அல்லது சுரம்:**

* ஒரு பிடி நொச்சியிலைகளை எடுத்து குடி நீர் செய்து குடிக்க குணமாகும்.

## நன்னாரி

**வேறு பெயர்கள்:** சாரிபா

**மருத்துவப்பயன்:**

**எரிவுடன் சிறு நீர் கழிதல்**

* நன்னாரி வேர்ப்பட்டையை இடித்து சூரணமாக்கி பசுப்பாலும் கற்கண்டும் சேர்த்து தினமும் காலை மாலைபருக குணமாகும் .

அல்லது

* நன்னாரி வேரை குடி நீர் செய்து கற்கண்டு டன் தினமும் காலை மாலைபருக குணமாகும் .

**கீழ்பிடிப்பு அல்லது வாதரோகம்:**

**பெண்களுக்கான வெள்ளை சாய்தல்**

* நன்னாரி வேரை இடத்து சூரணம் செய்து அதனுடன் சர்க்கரை சேர்த்து தினமும் காலை மாலை சாப்பிட குணமாகும்.

குறிப்பு: * இதன்வேரை பொடி செய்து தேநீருடன் சேர்த்துப் பருகலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்

எறும்பின் சுறுசுறுப்பும்
எருதின் உழைப்பும்
கழுகின் பார்வையும்
கழுதையின் பொறுமையும்
காகத்தின் கூட்டுறவும்
கிளியின் மொழியும்
குயிலின் இனிமையும்
மயிலின் அழகும்
சிங்கத்தின் நடையும்
சிறுத்தையின் வேகமும்
புலியின் வீரமும்
பூனையின் பதுமையும்
நரியின் தந்திரமும்
நாயின் நன்றியுணர்வும்
யானையின் அறிவும்
தேரையின் பாய்ச்சலும்
தேனியின் சேமிப்பும்
மானின் வாழ்வும்
மானிடர் வாழ்வில்
மாட்சி பெற உதவும் காட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுத மொழிகள்

☞ நோக்கம் என்னும் பறவை உயரப் பறக்க வேண்டுமாயின் முயற்சி, நம்பிக்கை என்னும் சிறகுகள் பலம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும்.

☞ இலக்கியப் படைப்பாளிகளை அவர்கள் இறப்பின் பின்னும் அவர்களின் படைப்புக்கள் வாழ வைக்கின்றன

☞ நீ யாருக்காக வாழ்கின்றாயோ அவர்களுக்காக சிலதை விட்டுக் கொடு உனக்காக யார் வாழ்கின்றனரோ அவர்களை யாருக்காகவும் விட்டுக் கொடுக்காதே.

☞ இறைவனை நேசிப்பதிலும பார்க்க இறைவனால் நேசிக்கப்படும் அருகதை உடையவர்களாக மாற வேண்டும்.

☞ கடவுளை நேசிப்பவன் கடவுளைத் தேடுகின்றான்: மனிதனை நேசிப்பவன் கடவுளாகவே வாழ்கிறான்.

☞ நாம் சிலபேரை வெறுப்பதற்குக் காரணம் அவர்களைப் புரிந்து கொள்ளாமைதான். அவர்களைப் புரிந்து கொள்ளாமைக்குக் காரணம் அவர்களை நாம் வெறுப்பது தான்.

☞ கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்.

☞ நேர்மையாளன் ஓர் எலும்புத் துண்டுக்காக தன்னை நாயாக மாற்றிக்கொள்ளமாட்டான்.

☞ கனிகள் தனக்குக் கிடைக்குமா இல்லையா எனச் சிந்தித்துக் கொண்டிருக்காமல் மரங்களை நடுகின்ற மனிதர் ஒவ்வொரு சமூகத்திற்கும் தேவை.

☞ எதையும் உண்மைக்காக இழக்கலாம்: எதற்காகவும் உண்மையை இழக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிப்பேரரசு வைரமுத்து

மரங்கள் இல்லையேல்
காற்றை எங்கேபோய்ச்
சலவை செய்வது ?

மரங்கள் இல்லையேல்
மழைக்காக எங்கேபோய்
மனுச் செய்வது ?

மரங்கள் இல்லையேல்
மண்ணின் மடிக்குள்ளே
ஏதப்பா ஏரி ?

பறவைக்கும் விலங்குக்கும்
மரம் தரும் உத்தரவாதம்
மனிதர்நாம் தருவோமா ?


உண்ணக்கனி
ஒதுங்க நிழல்
உடலுக்கு மருந்து
உணர்வுக்கு விருந்து

அடையக்குடில்
அடைக்கக் கதவு
அழகு வேலி
ஆடத்தூளி

தடவத் தைலம்
தாளிக்க எண்ணெய்
எழுதக் காகிதம்
எரிக்க விறகு

மரந்தான்
மரந்தான்
எல்லாம் மரந்தான்

மறந்தான்
மறந்தான்
மனிதன் மறந்தான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் வாழ்வு வளமிக்கதாக ஒளிர சந்தன மரமாய், மெழுகுவர்த்தியாய் இரவு பகலாய் எந்நேரமும் தன்னாலான சகலதும் செய்து எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய், ஒளியூட்டியாய்த் திகழ்ந்த எமது குடும்பத்தலைவி சிலகாலம் நோயுற்றுக் கிடந்த வேளையிலும் ஆயிரம் பிறைகண்டு 06.11.2016 அதிகாலை அமரத்துவம் அடைந்த காலையிலும் பிரிவுத் துயரறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறித் தேறுதல் தந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் பிரிவுச் செய்தியை சிலமணித் துளிகளில் அனைத்திடங்களுமறிய இணைய வழியில் தவளவிட்ட அன்பு நெஞ்சம் நயினை M.குமரன் அவர்களுக்கும், இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் வருகை தந்து துயர் பகிர்ந்த அனைவருக்கும் உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் தபால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு துயரில் இணைந்த அனைவருக்கும் மலர்மாலை, மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் சமர்ப்பித்த அனைவருக்கும் இறுதிக் கிரியைகள் நிறைவுறும் வரை வருகை தந்திருந்த உறவுகளுக்கும் வேளை தவறாது காலமறிந்துதேநீர் உணவு அளித்து உதவிய அயலவர்கள், உறவினர்கள் அனைவருக்கும், இறுதிக் கிரியையில் பங்கு கொண்டவர்கள், சடங்கு அந்தியேட்டிக் கிரியைகள் என இற்றைவரை பலவழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும், சகல கிரியைகளையும் முறையே நிறைவேற்றிய அந்தண சிவாச்சாரியார்கள் அனைவருக்கும் இம்மலரை குறுகிய காலத்தில் பிழையற, அழகுற அச்சிட்டு உதவிய வரன் அச்சகத்தினருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"


இங்ஙனம்
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்.
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி

" நன்னெறியே இறைவணக்கம் "

- சுவாமி விவேகானந்தர் -



வரன் பிறிண்டேர்ஸ். யாழ்ப்பாணம்.
தொ.பே: 0779176840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org